வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 06.06.2022 திங்கட்கிழமை | இதழ் : 182 | பக்கங்கள் : 16

# தேர்தல் நடத்தும் நிலையில் இலங்கை தற்போது இல்லை!



## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 06

**“நாடு தேர்தலை நடத்தும் நிலையில் இல்லை. அரசமைப்பின் 21ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். ஆனால், அது எந்த தேர்தலுக்கும் அழைப்பு விடுக்காது” - என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

அத்துடன், “நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் பொதுஜன வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்கப்படும். எனினும் அது தற்போது சாத்தியமற்றது.” - என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் என். டி. ரீ. வி. தொலைக்காட்சி 15

# சர்வஜன வாக்கெடுப்பின்றி 21ஐ நிறைவேற்ற எதிர்பார்ப்பு!

## நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ

கொழும்பு, ஜூன் 06

21ஆவது திருத்தச் சட்டத்தை சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேற்றும் வகையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், நிறைவேற்று அதி கார முறைமையை பகுதியளவில் குறைப்பதற்கான 21ஆவது திருத் தச்சட்ட மூல வரைவு இறுதி செய் யப்பட்டுள்ளது. இந்த வரைவு இன்று திங்கட்கிழமை அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும் என்றும் 15

# பாடசாலைகள் இன்று ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 06

நடப்பு ஆண்டின் இரண்டாம் தவணை கற்றல் செயல்பாடுகளுக்காக இன்று திங்கட்கிழமை முதல் அனைத்து பாடசாலைகளும் ஆரம்பமாகின்றன.

கோவிட் 19 தொற்று பரவல் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டமையால் 2022ஆம் ஆண்டுக்கான கற்றல் நடவடிக்கைகள் தாமதமாகின. இதனால், முதலாம் தவணை நிறை 15

# இலங்கைக்கு உதவுமாறு ஐ. நா. உலக நாடுகளை கோரவுள்ளது

## வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஜூன் 06

ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபை இலங்கைக்கு உதவி வழங்குமாறு உலக நாடுகளிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை ஒன்றை விடுக்கவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் 15

# இனி வெள்ளிக்கிழமைகளில் அரச பணியாளருக்கு விடுமுறை!

## பொது நிர்வாக அமைச்சர் கூறுகிறார்!

கொழும்பு, ஜூன் 06

அரச பணியாளர்களுக்கு இனி வெள்ளிக்கிழமைகளில் விடுமுறை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த யோசனை வரும் நாட்களில் முன்வைக்கப்படும் என்று பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் 15



# சிறுவர்களை தாக்குகிறது புதிய வைரஸ் காய்ச்சல்!

கொழும்பு, ஜூன் 06

கொழும்பு உட்பட பல பிரதேசங்களில் சிறுவர்களுக்கு புதிய வைரஸ் காய்ச்சல் ஒன்று பரவி வருகிறது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வைரஸால் பாதிக்கப் 15

# பால்மாவின் விலை மீண்டும் எகிறும்?

கொழும்பு, ஜூன் 06

பால்மாவின் விலையை மீண்டும் அதிகரிப்பதை தவிர்க்க முடியாது. இன்னும் சில தினங்களில் இது குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பால்மா இறக்குமதி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

வரி அதிகரிப்பு காரணமாக 15

## 21ஆவது திருத்தச் சட்டம்:

# இறுதி முடிவுகளை எட்டுவதற்காக தமிழ் கட்சிகள் இன்று கூடுகின்றன

யாழ்ப்பாணம், ஜூன் 06

21ஆவது திருத்தச் சட்ட மூலம் சம்பந்தமாக ஆராய்ந்து ஏகோபித்த இறுதி முடிவை எட்டுவதற்காக தமிழ் கட்சிகள் இன்று திங்கட்கிழமை 6 ஆம் திகதி கூடவுள்ளன. இந்தக் கூட்டம் மெய்நிகர் வழியில் இடம்பெறவுள்ளது.

முன்னதாக, முன்மொழியப்பட்ட 21ஆவது திருத்தச்சட்ட மூலம் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக தமிழ் அரசுக் கட்சி, புளொட், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ், தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன மெய்நிகர் வழியில் கூடியிருந்தன.

இதன்போது, தற்போது அரசியலமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தம் குறித்து கரிசனை செலுத்த வேண்டுமா, அதில் எவ் 15

# புதிய தலைமை உருவாகும்; இலங்கை மீள எழுச்சியுறும்!

## பிரபல சோதிடர்கள் நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 06

நாட்டில் புதிய தலைமை உருவாகும் என்றும், இதன் பின்னர் நாடு விரைவாக எழுச்சி பெறும் என்றும் பிரபல சோதிடர்கள் சாத்திர விதிகளை வைத்து நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சிங்கள ஊடகங்களில் இந்தக் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன.

கிவிபதி ஜெயதிர்வேதினி என்ற சோதிடரின் கருத்துப்படி,

கடினமான காலத்துக்குப் பிறகு ஒரு பொற்காலம் வரும் என்பது உறுதி. 2023 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் நாளுக்குப் பின்னர் நாடு படிப்படியாக வளர்ச்சியை நோக்கிச் செல்வதற்கான சாதகமான சூழல் உருவாகும். 2025 ஆம் ஆண்டு, எமது நாட்டுக்கு சிறந்ததாக இருக்கும். அந்த நேரத் 15

## இப்படியும் நடக்கிறது...!

இப்போது நாடு முழுவதுமே பேசுபொருள் இருபத்தியொன்று பற்றியதுதான். பெற்றோல் இல்லை, டீசல் இல்லை என்பதெல்லாம் இப்போது வழக்கமான ஒன்றாகிவிட்டது.

இவற்றுக்காக கியூவில் நிற்கத் தொடங்கியபோது அதுபற்றியே பேசிய நாம், இப்போது பெற்றோல் தேவையென்றால் நான்கு மணித்தியாலமோ தேவைப்பட்டால் இருபத்திநான்கு மணித்தியாலமோ கூட கியூவில் நிற்கத்தான் வேண்டும் என்பது பழகிப்போய்விட்டது.

இந்தப் பொருளாதார நெருக்கடியால் பலர் வேலையை இழக்கப்போவது எப்படி நிச்சயமானதோ அதேபோல, இந்த எரிபொருள் நெருக்கடி புதிதாக பலருக்கும் வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

கியூவில் நின்று பெற்றோல் நிரப்பிக்கொடுப்பதையே இன்று தமது வேலையாக்கிக் கொண்டிருக்கின்றார்கள் நூற்றுக்கணக்கான இளைஞர்கள். கொழும்பில் இதற்கென பெற்றோல் நிலையங்களில் பலர் காத்திருக்கின்றார்கள்.

தமது வசதிக்கேற்ப சைக்கிளில் போய்வந்தவர்கள் ஒரு "லீசிங்" போட்டு மோட்டார் சைக்கிளை வாங்கினார்கள். அவர்களில் சிலர் சற்று வசதி வரும்போது சிறிய கார் ஒன்றை வாங்கினார்கள்.

இப்படியே மாறிக்கொண்டிருந்த வாழ்க்கை இப்போது தலைகீழாகியிருக்கின்றது.

மோட்டார் சைக்கிளில் வேலைக்குப் போய்வருவதெனில் எடுக்கின்ற சம்பளத்தில் அரைவாசியை, ஏன் சிலர் அதனிலும் அதிகமாக செலவுசெய்யவேண்டியநிலை. அதனால் மீண்டும் சைக்கிள்களை தூசி தட்டி எடுத்து ஓடத் தொடங்கியிருக்கின்றனர் சிலர்.

சைக்கிள்களின் விலையும் மலைபோல உயர்ந்துவிட்டது. சைக்கிள் வாங்குவதற்கும் எங்காவது "லீசிங்" கொடுப்பர்களா என்று கேட்கிறார் நண்பர் ஒருவர்.

தனியார் துறை வேலைவாய்ப்பென்றால், அது உத்தரவாதமில்லாதது. செய்தால் அரசாங்க வேலைதான் செய்வோம் என்று அடம்பிடித்தவர்கள் நாங்கள். இப்போது அதுவும் உத்தரவாதமில்லாத ஒன்றாகிவிடுமோ என்ற நிலையில் சிலர் அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்றனர்.

சர்வதேச நாணயநிதியத்திடம் போய் ஏன் ராஜபக்ஷ அரசாங்கம் கடன் பெறவில்லை என்று குறைபட்டுக் கொண்டோம். இப்போது அங்குபோன பின்னர் அவர்களின் உதவிக்காக, அவர்கள் வைக்கும் நிபந்தனைகளை ஒவ்வொன்றாக ஏற்கத் தொடங்கியிருக்கின்றது அரசாங்கம்.

கோட்டாபய பதவிக்கு வந்ததும் பொருட்கள் மீதான பெறுமதி சேர் வரியை குறைத்தார். தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுமுகமாகவே அதனை அவர் செய்தார். ஆனால், அப்போது பொருட்களின் விலையை வர்த்தகர்கள் குறைத்ததாக இந்த ஊர்க்குருவிக்கு ஞாபகம் இல்லை. உங்களுக்கு இருக்கிறதோ தெரியவில்லை.

ஆனால், இப்போது வரி அதிகரிக்கப்பட்டவுடன் பொருட்களின் விலை மறு கணமே கூடிவிட்டது. சர்வதேச நாணய நிதியத்திற்குப் போகும்போதே இவை எல்லாம் எதிர்பார்க்கப்பட்டவை என்பதால் அதுகுறித்து நாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

அதுபோலவே, அரச சேவையிலும் பல இலட்சம் பேர் அளவுக்கதிகமாக இருக்கின்றனர் என்றும் அவர்களை குறைக்கவேண்டும் எனவும் நாணயநிதியம் நிபந்தனை விதித்திருக்கின்றது. அதுவும் எந்த வேளையிலும் நடைமுறைக்கு வரலாம். அப்போது வீட்டுக்கு அனுப்பப்படுபவர்கள் மீண்டும் வீதிக்கு வரவும் சந்தர்ப்பம் உண்டு. அதாவது ஆர்ப்பாட்டம் செய்யவும்.

இப்போது பொருளாதார நெருக்கடியை தீர்க்க எந்த சர்வதேச சக்தியிடம் மண்டியிடவேண்டும் என்று போராட்டம் நடாத்தினோமோ அவர்களின் விருப்பத்தின் பாதையில் நாடு பயணிக்கத் தொடங்கியிருக்கின்றது. அதேவேளை, நாடு அரசில் ரீதியாகவும் ஒரு ஸ்திரமான நிலையை அடைந்தால்தான் அந்த உதவிகள் நடக்கும். நாடு நெருக்கடியிலிருந்து கொஞ்சமேனும் நிமிரமுடியும்.

அரசியலில், ரணில் விக்கிரமசிங்க என்ற ஒரு தனி நபர் வந்தது மாத்திரமே இதுவரை நடந்திருக்கின்றது. மற்றும்படி அதே அரசுதான் இன்றும் ஆட்சியில் இருக்கின்றது. ராஜபக்ஷ குடும்பத்தினர் இப்போது அமைச்சரவையில் இல்லை என்பதைத்தவிர அவர்களின் முகாமில் இருந்தவர்களாலேயே இப்போதும் அரசை கொண்டு செல்லவேண்டிய நிலையில் ரணில் இருக்கின்றார்.

அவர் தலைமையில் ஒரு சர்வகட்சி அரசு அமைந்தால் மாத்திரமே இது அடுத்த தேர்தல் வரையாவது நிலையான ஆட்சியை அமைக்கமுடியும். அவ்வாறு சர்வகட்சி அரசு அமைவதற்கு இப்போதும் தடையாக இருப்பது ஜனாதிபதியிடமிருக்கும் அளவுக்கதிகமான அதிகாரங்கள்தான். கோட்டாபய தங்களை எந்த நேரத்திலும் பதவியிலிருந்து வெளியேற்றலாம் என்ற அச்சத்துடன் எவரும் ஆட்சியில் பங்கெடுக்க வரப்போவதில்லை. இதனால்தான் இருபத்தியோராவது திருத்தத்தை கொண்டுவந்து அவரிடமுள்ள அதிகாரங்களை குறைக்க முயற்சிகள் நடக்கின்றன. இந்த முயற்சி வெற்றிபெற்றால், இன்னும் பலர் எதிரணியிருந்து ரணிலுடன் கைகோக்க தயாராக இருக்கின்றனர் என்றே கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரு தரப்பிலும் விட்டுக்கொடுப்புக்களை செய்தாவது அதனை கொண்டுவந்துவிடவேண்டும் என்பதே இன்று பலரின் எதிர்பார்ப்பு.!

இந்நிலையில் இருபத்தியோராவது திருத்தத்தின் இறுதி வரைவு இன்றைய தினம் அமைச்சரவை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாளை பாராளுமன்றம் கூடும்போது அதுகுறித்து இன்னும் பல வாதப்பிரதிவாதங்கள் நடக்கும்.

பார்ப்போம் என்ன எல்லாம் நடக்கின்றது என்று?

**- ஊர்க்குருவி**

# மத்திய வங்கியின் சுயாதீனத்தை பிரதமர் ரணில் மதிக்க வேண்டும்!

## அதன் முன்னாள் பிரதி பணிப்பாளர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 06

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் டபிள்யூ.ஏ.விஜயவர்த்தன வலியுறுத்தியுள்ளார்.

மத்திய வங்கி மீதான எந்தவொரு தலையீடுகளும் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டுவரும் முயற்சிகளை வலு விழக்கச்செய்துவிடும் என்றும் அவர் இதன்போது எச்சரித்துள் ளார்.

நாட்டின் பொருளாதார நிலை தொடர்பில் ஆராயும் நோக்கில் இலங்கை மத்திய வங்கியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் நிகழ்வொன்றில் பங்கேற்றுக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவை இடையூறின்றி மேற்கொள்வதற்கு பில்லியன் கணக்கான ரூபாய்களை அச்சிடவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் வெளியிடப்பட்ட கருத்து பல்வேறு கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளது.

ஆனால், இந்த நடவடிக்கையானது நீரிழிவு நோயாளிக்கு சீனி அதிகளவில் உள்ள உணவை வழங்குவதைப் போன்றதாகும்.

இருப்பினும் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் புதிய வரி அறவீட்டு முறைமைகளை பிரதமர் இவ்வாரம் அறிவித்துள்ளமை நம்பிக்கையளிக்கிறது.

அத்துடன், மத்திய வங்கியின் மீதான அநாவசிய தலையீடுகள், நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்குத் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார். (ஐ)

## ரஷ்ய விமான விவகாரம்

# பயணிகள் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்!

கொழும்பு, ஜூன் 06

நீதிமன்ற தடை உத்தரவால் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஷ்ய ஏரோ ஃப்ளோட் விமானத்தில் நாட்டை வந்தடைந்த சகல பயணிகளும் நேற்று வெளியேறினர் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அந்த விமானத்தில் 191 பேர் நாட்டை வந்தடைந்த நிலையில், அவர்கள் வேறு விமானங்களின் ஊடாக ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்று சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் உப தலைவர் ரஜிவ் சூரியாராச்சி தெரிவித்தார்.

குத்தகை பிரச்னை காரணமாக ரஷ்யாவின் 'ஏரோ ஃப்ளோட்' விமானம் இலங்கையில் இருந்து வெளியேறுவதற்கு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தால் இடைக்கால தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த

# இந்திய திரையுலகினருடன் அமைச்சர் ஹரின் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 06

நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான வழிகளை ஆராயும் முயற்சியில், இலங்கையில் உள்ள பல இந்திய திரைப்படத்துறை பிரமுகர்களை சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ சந்தித்துள்ளார்.

அந்த வகையில், பிரபல பொலிவூட் நடிகர் டினோ மோரியா மற்றும் நடிகை சித்ரங்கதா சிங் ஆகியோர் சமீபத்தில் இலங்கையில் இருந்தபோது அவர்களை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தனித்தனியாக சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்புகளின் போது, இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கான சுற்றுலாத் தலமாக இலங்கையை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அமைச்சர் பெர்னாண்டோ விளக்கமளித்திருந்தார் .

அத்துடன், பொலிவூட் படங்களுக்கு இலங்கையையும் ஓர் இடமாக பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அவர் கருத்துக்களை வெளியிட்டிருந்தார். (ஐ)

# யோக கலை பயிற்சி நெறி நல்லூரில் ஆரம்பமானது!

யாழ்ப்பாணம், ஜூன் 06

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு இலவசமாக நடத்தும் யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

நல்லூர் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இந்தப் பயிற்சி நெறி தொடர்ச்சியாக நடைபெறவுள்ளது.

இளைஞர் விவகார அலகின் உதவி செயலாளர் திருமதி சிவப்பிரியா சுபாஸ்கரன் தலைமையில் ஆரம்பமான இந்த கற்கைநெறி சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை நடைபெறும்.

இந்த வகுப்புகளில் 19 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள் இருபாலாரும் கலந்துகொண்டு பயிற்சி பெற்றுவருகின்றனர். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ஐ)

# யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 06

மாத்தளை நாவுல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொரகஹ கந்தை பிரதேசத்தில் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் உயிரிழந்தார்.

அந்த இடத்தைச் சேர்ந்த 50 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த நபர், தனது தாயாருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போதே யானையின் தாக்குதலுக்கு இலக்காகினர்.

அந்தப் பகுதியினர் இருவரையும் மீட்டு மருத்துவமனையில் ஒப்படைத்தபோதும் ஒருவர் உயிரிழந்தார். தாயார் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜூன் 06

உலகெங்கும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமான வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இறை ஆசி வேண்டி பிரார்த்தனை நடைபெறுகிறது.

இந்தப் பிரார்த்தனை வரிசையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை கண்ணகிபுரம் இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ கிஸ்ணராஜக் குருக்கள் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வையும் வழங்கவுள்ளார்.

இந்த நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நேரடியாக ஒலிபரப்பாகும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
06.06.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், வைகாசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# தியாகங்களின் வெகுமதி?

1974, ஜுன் - 5இல் பொன். சிவகுமாரன் தான் வரித்துக்கொண்ட இலட்சியத்துக்காக உயிரை மாய்த்தார். அவர் உயிரிழந்து 48 வருடங்கள் ஆகின்றன. பொன். சிவகுமாரனை தொடர்ந்து, தாங்கள் வரித்துக் கொண்ட கொள்கைகளுக்காக, தங்களின் உயிர்களை கொடுப்பதற்கென ஓர் இளைஞர் கூட்டமே உருவாகியது. அதில் பலர் தாங்கள் செல்லும் பாதையின் சிக்கல்களை அறியாமலேயே இணைந்தவர்கள். அடுத்த பொங்கலுக்கு தமிழீழம் கண்டுவிடலாமென்று நம்பியவர்களும் உண்டு.

இவ்வாறானவர்களில் பலர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் விடுதலை இயக்கங்களிலிருந்து வெளியேறிவிட்டனர். விடுதலைப் புலிகள் இந்திய அமைதிப் படையுடன் மோதும் முடிவையெடுத்தபோது, விலகிச் சென்றவர்கள் இருக்கின்றனர். அவ்வாறு வெளியேறிவர்கள் பலர் இப்போதும் வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் தாயக அரசியலென்பது அசை போடுவதற்கான ஒரு விடயம் மட்டுமே! மத்தியதர வர்க்கத்தினர் வெறுமனே ஆதரவாளர்களாக சுருங்கிக் கொண்டபோது, ஏழை இளைஞர்களே போராட்டத்தை சுமக்கும் நிலை உருவாகியது. போராட்டம் இடம்பெற்றபோது வெளியேறிய மத்தியதர வர்க்கம்தான், இன்றைய தமிழ் புலம்பெயர் சமூகம்.

தாயக அரசியல் சூழலைப் பொறுத்தவரையில், நினைவு கூர்தல் என்பது, ஒரு கட்சி அரசியல் செயல்பாடு மட்டுமே! தாம் இந்த இடத்துக்கு எவ்வாறு வந்தோம் - ஏன் வந்தோம் - இப்படியான கேள்விகளோடு அரசியலை முன்னெடுக்கும் தமிழ் தலைமுறையொன்றை இப்போது காண முடியவில்லை. இப்போதெல்லாம், அடுத்த தேர்தலில் எந்தக் கட்சியுடன் நின்றால் இலகுவாக மாகாண சபையில் ஓர் இடத்தை பிடிக்கலாம் - எம். பி. ஆகலாம் - என்னும் அடிப்படையில்தான் விடயங்கள் நோக்கப்படுகின்றன.

தமிழ்த் தேசிய அரசியலென்பது வெறுமனே தேர்தல் அரசியலாக சுருங்கிவிட்டது. உரிமைக்கான அரசியல் பயணத்தில், தேர்தல் அரசியலுக்கும் ஒரு பங்குண்டு. நாம் அதனை மறுக்கவில்லை. ஏனெனில், அதிகாரத்தை கோரும் மக்கள் கூட்டமொன்றின் பிரதிநிதித்துவம் தவறானவர்களின் கைகளுக்கு சென்றுவிடக்கூடாது. ஏனெனில், சர்வதேச அரசியலில் ஒழுங்கில், தேர்தல்கள் மூலம் தெரிவாகும் பிரதிநிதிகளுக்கு ஒரு முக்கியத்துவம் உண்டு. அந்த வகையில் தேர்தல் அரசியல் முக்கியமானதுதான் - ஆனால், அது மட்டும்தான் அரசியலென்று, வெறுமனே பதவிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பதுதான் தவறானது.

இன்று, தமிழ்த் தேசிய அரசியலிலிருக்கும் எவருமே விமர்சனத்துக்கு அப்பால்பட்டவர்கள் அல்லர். விமர்சனங்களுக்கு அப்பால்பட்டு எவரும் இருக்கவும் முடியாது. ஓர் இலக்குக்காக செயல்படுகின்றபோது தவறுகள் நிச்சயம் இடம்பெறும். தமிழ்த் தேசிய அரசியலில் எவரும் புனிதர்களல்லர். புனிதர்களுக்கு அரசியலில் இடமுமில்லை.

அரசியலை, ஒடுக்குபவர்களின் அரசியல் - ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல் - என்றெல்லாம் நாம் வகைப்படுத்திக் கொண்டாலும்கூட, அரசியலுக்குரிய அடிப்படைகள் மாறவிடப் போவதில்லை. ஏனெனில், அனைத்து அரசியல் செயல்பாடுகளும் மனிதர்களால்தான் முன்னெடுக்கப்படுகின்றன. மனிதர்களால் முன்னெடுக்கப்படும் அனைத்திலும் மனிதர்களின் பலவீனம் நிச்சயம் தாக்கம் செலுத்தும். இந்த அடிப்படையில்தான் தமிழ்த் தேசிய அரசியலை நாம் உற்று நோக்க வேண்டும். ஒரு காலத்தில் - ஓர் இலட்சியத்தை முன்வைத்து, அதற்கான தங்களை ஆகுதியாக்கிக் கொண்டவர்கள் பல்லாயிரம்.

இப்போது நம்மை ஆக்கிரமித்திருக்கும் கேள்வி - அவற்றின் வெகுமதியென்ன? நாம் இன்று வந்து சேர்ந்திருக்கும் இடம் எது? பெருமைப் பட்டுக்கொள்ளக் கூடிய இடமா? இந்த நிலைமைக்கு சாதாரணமாக அவர், இவர் - அந்த நாடு, இந்த நாடென்று கூறிவிட்டு, நமக்கு நாமே ஆறுதல் கூறிக்கொள்ளலாமா?

யுத்தம் நிறைவுற்று பதின்மூன்றாண்டுகளாவிட்டன. ஆகக் குறைந்தது - நமக்குள், ஒரு ஐக்கிய முன்னணியைக்கூட நம்மால் உருவாக்கிக்கொள்ள முடியவில்லை. இப்போதும் மக்களின் நலன் கருதிய விடயங்களில் விட்டுக் கொடுப்புடன் - அரசியல் கட்சிகளால் ஒன்றுபட்டு செயல்பட முடியவில்லையென்றால், தியாகங்களைப் பற்றி பிரஸ்தாபிப்பதில் என்ன பொருளுண்டு? ஆகக் குறைந்தது, கட்சிகளின் பெயரால், தியாகங்களை கொச்சைப்படுத்தாமலாவது இருக்க முயற்சிக்கலாம்.

# புலம்பெயர்ந்தோரின் ‘அபிமானத்துக்குரிய’ ஏரோபுளொட் !

**அலசுவது இராஜதந்திரி**

*ஏரொபுளொட் என்ற ரஷ்ய விமான சேவையே எண்பதுகளின் ஆரம்பத்திலும் பின்னர், தொண்ணூறுகளிலும் வடக்கு - கிழக்கு பிரதேச இளைஞர்கள் மத்தியில் பிரபலம் பெற்றதாக இருந்ததோடு கொழும்பிலுள்ள வெளிநாட்டு பயண முகவர் நிறுவனங்கள் பலவற்றிலும் ஏரோபுளொட் விமானம் மூலமாக வெளிநாடுகளுக்கு செல்லவதற்கு ஏராளமான தமிழ் இளைஞர்கள் முண்டியடித்துக் கொண் டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.*

*கொழும்பிலிருந்த வெளிநாட்டு பயண முகவர் நிறுவனங்கள் பலவும் அப்போது வட பகுதியைச் சேர்ந்தவர்களாலேயே நடத்தப்பட்டன. அத்துடன், அவர்கள் ரஷ்யாவின் தேசிய விமான சேவையான ஏரோபுளொட்டோடு மிக நெருக்கமாக இயங்கியும் வந்திருந்தனர்.*

*எண்பதுகளில் சோவியத் சோஷலிஷ குடியரசு பிளவுபடுவதற்கு முன்பதாக ஏரோபுளொட் விமான சேவை சோவியத் ரஷ்யாவின் தலைநகர் வாயிலாக வடக்கு - கிழக்கு இளைஞர்களை ஐரோப்பிய நகரங்களுக்குள் கொண்டு சேர்த்திருந்தது.*

*வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்து இளைஞர்கள் வெளிநாடுகளுக்கு எண்பதுகளின் ஆரம்பத்தில் தமது பாதுகாப்பை கருத்தில் கொண்டே தப்பிச்சென்றிருந்தனர்.*

*எழுபதுகளின் நடுப்பகுதியில் யாழ்ப்பாண மேயர் அல்பிரட் துரையப்பா மற்றும் வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஆ. தியாகராஜா உட்பட வடக்கே சிறீ லங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்களும் தென்னிலங்கையில் பதவிக்கு வந்த அரசுகளின் ஆதரவாளர்களும் கண்மூடித்தனமான முறையில் வேட்டையாடப்பட்டிருந்தனர்.*

*இதன்காரணமாக வடக்கே பொலிஸார் மற்றும் ஆயுதப் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்திருந்தன. இரவு, பகல் என்றில்லாது வீடுகள் தோறும் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் விரிவடைந்திருந்தன.*

*எனவே, அச்சமயத்தில் இரு வேறு வார்த்தைகளுக்கு வட பகுதியினர் பரிச்சயமாகியிருந்தனர். அவற்றில் ஒன்று குற்றப் புலனாய்வுப் பொலிஸாரின் கொழும்பிலிருந்த நான்காம் மாடி சித்திரவதைக்கூடம் மற்றையது இளைஞர்கள் வடக்கேயிருந்து வெளியேறுவதற்கு பெரிதும் நாடிச்சென்ற ஏரோபுளொட் விமான சேவை.*

*ஏரொபுளாட் விமானசேவை வட பகுதி இளைஞர்கள் மத்தியில் பிரபலமடைந்ததையடுத்து அந்த விமான சேவையின் விமானிகள் உட்பட ஏனைய விமான சிப்பந்திகள்கூட ஓரளவு தமிழில் பேசக்கூடியவர்களாக இருந்தனர்.*

*ஆனால், தற்போது ஏரோபுளொட் நிறுவனத்துக்கும் அயர்லாந்து விமான சேவை கம்பனி ஒன்றுக்குமிடையிலான சட்டப் பிணக்கு ஒன்றையடுத்தே ஏரோபுளொட் விமானமொன்று கொழும்பு வர்த்தக நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய பண்டாரநாயக்க சர்வதேச விமான நியைத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இதன்காரணமாக இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாக வந்திருந்த ரஷ்ய பயணிகள் பலரும் தற்சமயம் கொழும்பில் நாடு திரும்ப முடியாது தங்கியிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், ஏரோபுளொட் என்ற வார்த்தை வடக்கு-கிழக்கின் சமூகவியல் மாற்றத்தோடு மிகவும் சம்பந்தப்பட்டதாக இருந்தமையே தற்சமயம் நினைவுக்கு வருகின்றது.*

*விமானப் பயண முகவர்கள் மட்டுமல்ல. தரகர்கள் இடைத்தரகர்கள் என்று பலதரப்பட்டவர்களும் அன்று வட பகுதி இளைஞர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.*

*வடபகுதி மக்களின் வாழ்க்கை சேமிப்பு நடவடிக்கைகளோடு பெரிதும் பின்னிப்பிணைந்ததாகும். தங்க நகைகளை அவர்கள் ஆடம்பரத்துக்காக அணிந்ததைவிட சேமிப்பின் ஒரு முக்கிய பாகமாகவே அணிந்திருந்தனர்.*

*யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி இருக்காத இளைஞர்கள் பலரும் இடைத்தங்கலாக கொழும்பிலிருந்து விட்டு நேரடியாகவே மிக முக்கிய ஐரோப்பிய நகரங்களை சென்றடைந்திருந்தனர்.*

*இவ்வாறு வடபகுதி இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஓர் அனுகூலமாக இருந்த விமான சேவையே ஏரோபுளொட் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு காரணம் ஏனைய விமான சேவைகளைவிட சிக்கனமாக பயணச்சீட்டுகளை ஏரோபுளாட் விநியோகித்தமையாகும்.*

*எண்பதுகளிலும் பின்னர் தொண்ணூறுகளிலும் கம்யூனிசத்தின் வீழ்ச்சியோடு சோவியத் யூனியன் பிளவுபடத்தொடங்கியது. அத்துடன், சோவியத் யூனியனின் நட்பு நாடுகளும் ஆட்டம் காணத்தொடங்கியிருந்தன.*


*தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் கொழும்பு கோட்டை புகையிரத நியைத்துக்கருகே அமைந்திருந்த வெளிநாட்டுப்பொருட்களின் அங்காடி வியாபார மையமாக விளங்கிய “உலக சந்தை“யில் ஒரு தடவை ஏராளமான ரஷ்யர்கள் மூட்டை முடிச்சுகளோடு வந்திருந்தனர். அவர்கள் தமது கையில் அகப்பட்ட ரஷ்ய உற்பத்திப் பொருட்களைக் கொண்டு வந்து அங்கே மிக மலிவு விலையில் விறபனை செய்திருந்தனர்.*

*இதுதவிர ரஷ்ய இளம்பெண்கள் பலர்கூட ஐரோப்பிய நகரங்களிலே தமது வாழ்வாதாரத்துக்காக விபசாரத்தில் ஈடுபட்ட அவல நிலையும் தோன்றியிருந்தது.*

*இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் விண்வெளிக்கு முதலில் மனிதனை அனுப்பிய நாடு என்ற பெருமையோடு ஒரு வல்லரசாக இருந்த சோவியத் யூனியன், பின்னாளில் தனது தனித்துவத்தை இழந்து சர்வதேச அரங்கில் தற்போது உக்ரைன் பிரச்னை காரணமாக ஓரங்கப்பட்ட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் எண்பதுகளிலும் பின்னர் தொண்ணூறுகளிலும் ஐரோப்பிய நகரங்களை வடபகுதி இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்திய ஒரு விமானசேவை என்ற வகையில் ரஷ்யாவின் ஏரோபுளொட் விமான சேவையே மனதில் நிழலாடுகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜுன் - 06 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 23
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சப்தமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தினருடன் விருந்துக்கு செல்வர்கள். தாய்வழி உறவுகளின் உதவி உண்டாகும்.மனம் விரும்பிய போக்கில் செயல்படுவீர்கள். நிம்மதியை இன்று அடைவீர்கள். சிலர் வெளியூர் செல்வர்.

**இடபம்**
எண்ணம் இன்று நிறைவேறும். குடும்பத்தினரின் நலனில் கவனம் செலுத்துவீர்கள். வீடு, மனை வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள்.குடும்ப பிரச்னைகளை சரிசெய்வீர்கள்.

**மிதுனம்**
குடும்பத்தினருக்காக பல வழிகளில் செலவு செய்வீர்கள். கையிருப்பில் ஒரு பகுதி கரையும்.சொத்து வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். நீண்ட நாள் எண்ணம் ஒன்று இன்று நிறைவேறும்.

**கடகம்**
நினைத்ததை இன்று நிறைவேற்றுவீர்கள். எதிர்காலம் பற்றிய சிந்தனை அதிகரிக்கும்.தந்தை வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். நீண்டநாள் எண்ணம் ஒன்று இன்று நிறைவேறும்.

**சிம்மம்**
குடும்பத்தினருடன் வெளியில் சென்று வருவீர்கள். செலவு அதிகரிக்கும். சிக்கனம் தேவை. குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். வாகன வழியில் செலவு ஏற்படும். கவனமுடன் செயல்படுங்கள்.

**கன்னி**
எதிர்பார்ப்பு நடந்தேறும். கேட்ட இடத்தில் இருந்து பணம் வரும். புதிய முயற்சி கை கொடுக்கும். எதிர்பார்த்த வருமானம் வரும். இனிய சம்பவம் நடந்து மகிழ்வீர்கள்.தொழிலை விரிவு செய்வீர்கள்.

**துலாம்**
புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். நண்பர்கள் உதவுவர். கவனமுடன் செயல்பட வேண்டிய நாள். உங்கள் முயற்சியில் ஒன்று வெற்றி பெறும். நண்பர்களுடன் வெளியில் சென்று வருவீர்கள்.

**விருட்சிகம்**
அறிவாற்றல் வெளிப்படும். குடும்பத்தினரின் தேவை நிறைவேறும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்குரிய முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.பெற்றோரின் ஆதரவால் எண்ணம் நிறைவேறும்.

**தனுசு**
பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. நீங்கள் நினைப்பதற்கு மாறாக நடக்க வாய்ப்புண்டு.சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவி கிடைக்காமல் போகும்.

**மகரம்**
பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. நீங்கள் நினைப்பதற்கு மாறாக நடக்க வாய்ப்புண்டு. சிந்தித்து செயல்பட வேண்டிய நாள். எதிர்பார்த்த இடத்தில் இருந்து உதவி கிடைக்காமல் போகும்.

**கும்பம்**
முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உடல்நிலையில் சங்கடம் விலகும். சுறுசுறுப்பாக செயல்படுவீர்கள். உறவினர் வருகை மகிழ்ச்சியை ஏற்படுத்தும். குடும்பத்தினர் நலனில் அக்கறை கொள்வீர்கள்.

**மீனம்**
வேலைகளை இன்று ஒத்திப் போடுவீர்கள். குடும்பத்தினருக்காக செலவு செய்வீர்கள்.அவசர வேலைகளை முடிப்பீர்கள். உடலும் மனமும் சோர்வு பெறும். குடும்பத்தினரின் ஆதரரவு கூடும். எதிர்காலம் பற்றிய சிந்தனை மேலோங்கும்.

# எங்களை விடுவியுங்கள் இல்லையேல் கருணைக் கொலை செய்துவிடுங்கள்!

## போராடும் ஈழத் தமிழர்கள் கோரிக்கை



திருச்சி, ஜுன் 06

“எங்களுக்கான விடுதலையை பெற்றுத் தர முடியவில்லை எனில் ஈழத் தமிழர்களான எங்களை கருணைக் கொலை செய்துவிடுங்கள்”, என்று திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுப்போர் தெரிவித்துள்ளனர்.

வீசா காலம் நிறைவடைந்த பின்னரும் தங்கியிருந்தமை, சட்ட விரோதமாக நாட்டுக்குள் நுழைந்தமை போன்ற காரணங்களை முன்வைத்து திருச்சி சிறப்பு முாகமில் ஈழத் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். நேற்று 17ஆவது நாளாக போராட்டம் தொடர்ந்தது. உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 9 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்நிலையில், “இதுவரை எந்த அதிகாரிகளும் எங்களை வந்து பார்க்கவும் இல்லை விடுதலை தொடர்பான எந்த முடிவுகளும் கூறவும் இல்லை. எங்களுக்கான விடுதலையை பெற்றுக் கொடுக்க முடியவில்லை எனில், ஈழத் தமிழர்களை கருணைக் கொலை செய்து விடுமாறு கேட்டுக்கொள்கிறோம் என்றனர்.

திருச்சி சிறப்பு முகாமில் முன்னெடுக்கப்படும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் விதமாக தமிழகத்தின் ஏனைய சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்கள் ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர். (ஐ)

# ஈழத் தமிழர்களுக்கான உதவிகள் மத்திய அமைச்சருடன் ஆலோசனை



## புதுச்சேரி ஆளுநர் தமிழிசை

புதுச்சேரி, ஜுன் 06

இலங்கை தமிழர்களுக்கான உதவிகள் குறித்து மத்திய அமைச்சருடன் புதுச்சேரி, தெலுங்கான ஆளுநர் தமிழிசை ஆலோசனை நடத்தினார்.

மத்திய வெளியுறவுத்துறை மற்றும் கலாசாரத்துறை இணை அமைச்சர் மீனாட்சி லேகி புதுச்சேரியில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு திட்ட பணிகளை ஆய்வு செய்து வருகிறார். இந்நிலையில் இலங்கை தமிழர்களுக்கான உதவிகள் குறித்து மத்திய அமைச்சருடன் ஆளுநர் தமிழிசை ஆலோசனை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்குவோம்!

## முதலமைச்சர் ஸ்டாலின் உறுதி



சென்னை, ஜுன் 06

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தான் கவலையடைவதாகவும், இலங்கை மக்களுக்கு அவசியமான அத்தியாவசியப் பொருட்களை மேலும் வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தமிழக முதலமைச்சர் எம்.கே.ஸ்டாலின் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொடவிடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடந்த சந்திப்பிலேயே இந்த உறுதி வழங்கப்பட்டது.

‘இந்திய, இலங்கை தூதரகங்களுக்கான ஒன்றிணைந்த தேசிய உத்தி’ என்ற கொள்கை செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தின் ஓரங்கமாகவே இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அதனைக் கையாள்வதற்கு 200 கோடி ரூபாய் பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்கியமைக்காக உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட தமிழக முதலமைச்சருக்கும், தமிழக மக்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், இலங்கையின் தற்போதைய நிலை குறித்து தான் கவலையடைவதாகவும் அத்தியாவசியப் பொருட்களைக் கப்பலில் ஏற்றி, இலங்கைக்கு உடனடியாக அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்தியாவசியப்பொருட்கள் ஏற்றப்பட்ட இரண்டாவது கப்பல் அனுப்பிவைக்கப்படுவதற்குத் தயார்நிலையில் இருப்பதாகவும், மேலும் சில கப்பல்களை அனுப்பி வைப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பின்போது இலங்கை மற்றும் தமிழ்நாடு ஆகியவற்றுக்கு இடையில் நிலவும் மீனவர் பிரச்னை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ஐ)

# பாலைப்பாணி காட்டுப் பகுதியில் வெளிமாவட்டத்தவருக்கு காணி!

## வனவள திணைக்களம் ஆதரவென கிராமத்தினர் சாடல்

முல்லைத்தீவு, ஜூன் 06

**முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பாலைப்பாணியில் வன வளத் திணைக்களத்துக்கு சொந்தமான காடுகளை அதிகாரிகளின் ஆதரவுடன் வெளி மாவட்டத்தவர்கள் கனரக வாகனங்களைப் பயன்படுத்தி துப்புரவு செய்கின்றனர் என்று அந்தக் கிராம மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

நேற்றுமுன்தினம் தொடக்கம் இந்தப் பணி முன்னெடுக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தமிழ் மக்கள் பூர்வீகமாக வசிக்கும் இந்தப் பகுதியில் 75இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில், 15 வரையான குடும்பங்களுக்கு மாத்திரமே சொந்தக் காணிகள் உள்ளன. ஏனைய குடும்பங்களுக்கு பயிர்செய்கை காணிகள் இல்லாத நிலையில் அவர்களுக்கான காணிகளை பெற்றுத்தருமாறு தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.



இந்நிலையில், அவர்களுக்குக் காணிகளை வழங்க இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையிலேயே வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் காடுகளை அழித்து காணிகளைப் பெற வனவளத் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது.

வனவளத் திணைக்கள அதிகாரிகளின் வட்டார அலுவலகம் அமைந்துள்ள பகுதியிலிருந்து மூன்று கிலோமீற்றர் தொலைவிலேயே இவ்வாறு கனரக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு காடுகள் அழிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# வட்டுக்கோட்டை பேராலயம் மீள்பிரதிஷ்டை செய்யப்பட்டது

மானிப்பாய், ஜூன் 06

தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண ஆதீனத்தின் வட்டுக்கோட்டை பேராலயம் நேற்று மீள் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

400 வருட பழமை கொண்ட இந்தப் பேராலயமானது மீளப் புனரமைக்கபட்ட நிலையில் திருச்சபையின் பேராயர் டானியல் தியாகராஜாவால் நேற்று காலை 9 மணியளவில் வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து விசேட ஆராதனை, வழிபாடுகள் இடம்பெற்றன. இதன்போது, உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள், ஆசிரயர்களால் விசேட பாடல்களும் பாடப்பட்டன. மேலும், திடப்படுத்தல், ஞானஸ்நானம் , உதவி குரு நிலைப்படுத்தல் போன்ற நிகழ்வுகளும் பேராயரின் தலைமையில் இடம்பெற்றன.

இந்த ஆராதனை வழிபாடுகளில் தென்னிந்தியத் திருச்சபையின் மதகுருமார், உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர்கள் மாணவிகள், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி திருச்சபையினர், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-6)



# முன்னாள் எம். பி. சிவசிதம்பரத்தின் 20ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு

வடமராட்சி, ஜூன் 06

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு. சிவசிதம்பரத்தின் 20ஆவது ஆண்டு நினைவு தினம் நெல்லியடி பேருந்து நிலையத்தில் உள்ள திருவுருவச் சிலை முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ. இராகவன் தலைமையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை 9 மணியளவில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில், அமரரின் திருவுருவச் சிலைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் மலர் மாலை அணிவித்து நினைவுரை ஆற்றினார்.

இந்த நிகழ்வை தொடர்ந்து அத்துளு அம்மன் கோயில் அருகே உள்ள சிவசிதம்பரத்தின் வீட்டிலும் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, அமரரின் உருவப் படத்துக்கு ஓய்வுநிலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். இராசையா, ஓய்வுநிலை அதிபர் எஸ். சிதம்பரநாதன், இ. இராகவன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்கள் இந்த நிகழ்வுகளில் பொதுமக்கள் அரசியல் தரப்பினர் எனப் பலர் பங்கேற்றிருந்தனர். (ஐ-2)

# கஞ்சா விற்ற மூவர் கைது

வடமராட்சி, ஜூன் 06

பருத்தித்துறை திக்கத்தில் சுமார் ஒரு கிலோ 900 கிராம் கேரளா கஞ்சா பொதியுடன்மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்தப் பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்அடிப்படையில் வல்வெட்டித்துறை பொலிஸாருடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

திக்கம், தும்பளை மற்றும் பலாலி அந்தோணிபுரம் ஆகிய பகுதிகளை சேர்ந்த மூவரே கைது செய்யப்பட்டனர்.

இது தொடர்பில் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-2-3)

# மின் மார்க்க திருத்தப் பணி

யாழ்ப்பாணம், ஜூன் 06

புங்குடுதீவு பிரதேசத்துக்குக் கடல் மார்க்கமாக செல்லும் உயர் அழுத்த மின் வடங்கள் மற்றும் மின் கம்பங்களைப் பராமரிக்கும் பணிகள் நேற்று ஆரம்பமாகின. தொடர்ந்து சில நாட்களுக்கு இந்தப் பணி முன்னெடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

கடல்நீர் வற்றும் காலத்திலேயே இந்தப் பணிகளை மேற்கொள்ள முடியும். இதனால், எதிர்வரும் ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் கட்டம் கட்டமாக இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இலங்கை மின்சாரசபை தீர்மானித்துள்ளது. (ஐ)





# போராளி பொன். சிவகுமாரனின் 48ஆவது நினைவேந்தல் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 06

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் முதல் வித்தான பொன். சிவகுமாரனின் 48ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுஉரும்பிராயிலுள்ள அவரின் திருவுருவச் சிலை அருகே இடம்பெற்றது.

வலி. கிழக்கு பிரதேச சபையால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வு அதன் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 10 மணிக்கு அஞ்சலி ஆரம்பமான அஞ்சலி நிகழ்வில், ஈகைச்சுடரை பொன். சிவகுமாரனின் சகோதரி ஏற்றிவைத்தார். இதைத் தொடர்ந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார். தொடர்ந்து அரசியல்வாதிகள், பொது அமைப்பினர் மலர் மாலைகளை அணிவித்தனர். இதைத் தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொன். சிவகுமாரனின் காலத்தில் அவருடன் செயல்பட்ட அரசியல் தலைவர்கள், நண்பர்களால் அஞ்சலி உரைகள் நிகழ்த்தப்பட்டன.

இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

வருடாந்தம் பொன். சிவகுமாரனின் நினைவேந்தலை வலி. கிழக்கு பிரதேச சபை மேற்கொள்வது என்று முன்தாக தீர்மானம் இயற்றப்பட்டது. இதற்கமையவே இந்த அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. (ஐ)

# யாழ். போதனா மருத்துவமனைக்கு மருந்துகளை அன்பளித்தது இந்தியா!

யாழ்ப்பாணம், ஜூன் 06

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு உயிர்காக்கும் மருந் துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இந்திய அரசாங்கம் வழங்கியுள்ளது.**

இரண்டு வாகனங்களில் கொண்டுவரப்பட்ட இந்த மருந்துப் பொருட்கள் மற் றும் உபகரணங்கள் யாழ்ப் பாணத்துக்கான இந்திய துணைத் தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் நந்தகுமா ரிடம் நேர டியாக வழங்கி வைத்தார்.

தற்போது நாட்டில் நில வும் பொருளாதார நெருக் கடியில் மருந்து பொருட் களுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் சூழலில் யாழ்ப்பா



ணம் போதனா வைத் தியசாலை நிர்வாகம் இந்தியத் துணைத் தூ தரகத்திடம் விடுத்த வேண்டு கோளுக் கிணங்க இந்த மருந்துப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். போதனா மருத் துவமனையின் அதி காரிகள், மருத்துவர்கள் மற்றும் இந்திய துணை தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-3)

## சைக்கிள்கள் திருடியவர் வடமராட்சியில் கைது!

வடமராட்சி, ஜூன் 06

வடமராட்சியில் இடம்பெற்ற பல்வேறு திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந் தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

துன்னாலை பகுதியை சேர்ந்த 19 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளாரென நெல்லியடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் நெல்லியடியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் திருட்டு போன சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் பல்வேறு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இதன் அடிப்படையில், விசாரணைகளை மேற்கொண்டிருந்த குற்றத்தடுப்பு பொலிஸார், திருட்டுப் போய் இருந்த 7 சைக்கிள்களைக் கைப்பற்றியதுடன், சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

குறித்த சந்தேக நபர் கடந்த வாரம் நெல்லியடி நகரப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையமொன் றில் கத்தி முனையில் அச்சுறுத்தி பணத்தை கொள்ளையடித்து சென்றமையும் விசாரணை களில் தெரியவந்துள்ளது. அத்துடன், யாக்கரு பகுதியில் உள்ள வீடொன்றில் தொலைக்காட்சி திருடப்பட்ட சம்பவம் தொடர்பிலும் கைதான நபர் அடை யாளம் காணப்பட்டுள்ளாரென்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-2)

### கொழும்புத்துறை கொலை வழக்கு:

## இருவரின் மரண தண்டனைத் தீர்ப்பு மேன்முறையீட்டு மன்றால் தள்ளுபடி!

யாழ்ப்பாணம், ஜூன் 06

கொழும்புத்துறை கொலை வழக்கில் எதிரிகள் இருவருக் கும் விதிக்கப்பட்டிருந்த தூக் குத் தண்டனை தள்ளுபடி செய் யப்பட்டுள்ளது. கொலைக் குற் றத் தீர்ப்பையும் தூக்குத் தண்ட னையையும் தள்ளுபடி செய்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி 3ஆம் திகதி இரவு கொழும்புத் துறையைச் சேர்ந்த கடற்றொழி லாளியான மார்க்கண்டு சிவ ராசா என்பவர் தனது வீட்டுக் கிணற்றிலிருந்து சடலமாக மீட் கப்பட்டார்.

சடலத்தில் காயங்கள் காணப்பட்ட நிலையில் புலன் விசாரணை நடத்திய யாழ்ப் பாண குற்றப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் இறந்தவரின் மனைவியையும், கடற்றொழி லாளியின் நண்பர் ஒருவரையும் கைது செய்தனர்.

இதனையடுத்து இறந்த வரின் வீட்டின் பின்புறத்தில் இருந்து கொலைக்கு உபயோ கிக்கப்பட்டன எனத் தெரி விக்கப்பட்ட கத்தி, மண் வெட்டி என்பன கைப்பற்றப் பட்டன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்ற சுருக்க முறையற்ற விசாரணையின் பின் யாழ்ப்பாணம் மேல் நீதிமன் றுக்கு வழக்கு பாரப்படுத்தப் பட்டது.

யாழ்ப்பாண மேல் நீதி மன்றத்தில் நீதிபதி ஜெ. விஸ்வ நாதன் முன்னிலையில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு, இரண்டு எதிரிகளுக்கும் எதி ரான கொலைக் குற்றச்சாட்டு அரச தரப்பால் நிரூபிக்கப்பட்ட தாகத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இருவருக்கும் தூக்குத் தண் டனை விதிக்கப்பட்டது. இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து எதிரிகளான கமலநாதன் கங்காதரன், சிவராசா சுமதி ஆகிய இருவரும், தமது சட்டத் தரணிகள் எஸ். சிவநேசன், பி. தவபாலன் ஆகியோர் மூலம் மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தனர்.

இந்த மனு மீதான விசா ரணை மேன்முறையீட்டு நீதி மன்ற நீதியரசர்கள் பந்துல கரு ணாரத்ன, ஜீ. குருசிங்க ஆகி யோர் முன்னிலையில் நடை பெற்றது. மேன்முறையீடுகளை ஆதரித்து, சட்டத்தரணி எஸ். பஞ்சாட்சரத்தின் அனுசரணை யுடன் மூத்த சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா வாதாடினார்.

கொலை தொடர்பில் கண் கண்ட சாட்சியம் இல்லாத நிலையில், திருப்திகரமான சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியம் முன்வைக்கப்பட்டிருந்தால் மட் டுமே குற்றத்தீர்ப்பு வழங்கப் பட முடியும் என்று மூத்த சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா தனது சமர்ப்பணங்களில் சுட் டிக்காட்டினார்.

இரண்டு எதிரிகளும், ஒரு வர் பின் ஒருவராக கைது செய் யப்பட்டு, புலன் விசாரணை யின்போது வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு, கொலைக்கு பயன்படுத்தப் பட்ட ஆயுதங்களும் கைப்பற் றப்பட்டமை வரையிலான நடவடிக்கைகளில் சம்பந்தப் பட்டிருந்த பொலிஸ் பொறுப் பதிகாரியும், பெண் பொலிஸ் கான்ஸ்ரபிளும் முரண்பாடான முறையில் சாட்சியம் அளித் திருப்பதை மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா சுட்டிக்காட்டினார்.

முதலாம் எதிரி கைது செய் யப்பட்ட இடம், நேரம் பற்றி யும் கொலைக் கருவிகளை கைப்பற்றிய பொலிஸ் அதிகாரி யார்? என்பது தொடர்பிலும் இருவரின் சாட்சியமும் பாரதூ ரமான முறையில் முரண்படுவ தாக அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

கொலை செய்யப்பயன்பட் டதாகக் கூறப்படும் கருவிகள் வழக்கு விசாரணையில் பொலிஸ் சாட்சிகளால் முறை யாக அடையாளம் காட்டப் பட்டிருக்கவில்லை என்றும் அவர் மேலும் சமர்ப்பித்தார்.

இந்தகைய நிலைமையில் குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டி ருப்பது சட்டரீதியானது அல்ல என்றும் மூத்த சட்டத்தரணி ஸ்ரீகாந்தா வாதாடினார்.

பிரதிவாதியான சட்ட மா அதிபர் தரப்பில் முன்னிலை யான அரச சட்டவாதி சுகாசி ஹேரத் தனது பதிலுரையில், மறுதரப்பால் சுட்டிக்காட்டப் பட்ட முரண்பாடுகள் முக்கிய மானவை அல்ல என்று தெரி வித்தார்.

முதலாம், இரண்டாம் எதிரி களுக்கிடையில் இருந்த தகாத நட்புக் காரணமாக, சம்பவ தினம் பகல் இறந்தவரும் முத லாம் எதிரியும் கடுமையாக வாக்குவாதப்பட்டதைப் பற்றி இறந்தவரின் மகளான சிறுமி சாட்சியம் அளித்துள்ளார் என்று அரச சட்டவாதி குறிப் பிட்டார்.

எதிரிகள் இருவரும் அளித்த வாக்குமூலங்களின் பிரகாரமே இறந்தவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கத்தியும், மண்வெட்டியும் கைப்பற்றப் பட்டன என்பதை அவர் சுட் டிக்காட்டி மேலும் வாதாடி னார்.

இரு தரப்பு வாதங்களின் பின்னர் தீர்ப்பு வழங்கிய மேன் முறையீட்டு நிதியரசர்கள், அரச தரப்பு சாட்சியத்தில் சில முக்கி யமான விடயங்களில் காணப்ப டும் திட்டவட்டமான முரண் பாடுகளை புறந்தள்ள முடி யாது எனத் தெரிவித்து மேல் நீதிமன்றம் வழங்கிய குற்றத் தீர்ப்பையும் தூக்குத் தண்ட னையையும் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தனர்.

## அனலைதீவு கடற்கரையில் மனித எச்சங்கள் ஒதுங்கின

யாழ்ப்பாணம், ஜூன் 06

அனலைதீவு கடற்கரையில் மனித எச்சங்கள் கரையொதுங் கியமை கண்டுபிடிக்கப்பட் டுள்ளன.

கடற்படையினரின் கட்டுப் பாட்டில் உள்ள அனலைதீவு கடற்கரையிலேயே மனித எச்சங்கள் இவ்வாறு கரையொ துங்கியுள்ளன. இது தொடர்பில் பிரதேச வாசிகள் கருத்து தெரிவிக் கையில், மனித எச்சங்கள் கரையொ துங்கிய கடற்கரைக்கு அருகா மையில் மயானம் காணப் பட்டதாகவும் அதிலிருந்து மனித எச்சங்கள் கடலரிப்பின் மூலம் வெளிவந்திருக்கலாம் எனத் தெரிவித்தனர். வேறு சிலர், கடலில் காணாமல் போனவரின் மனித எச்சங்கள் நீண்ட காலத்துக்குப் பின்னர் கரை ஒதுங்கி இருக்கலாம் என்று கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸா ருக்கு தகவல் வழங்கப்பட்ட தை யடுத்து பொலிஸார் அந்தப் பகுதி களில் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## குற்றுயிராக மீட்கப்பட்டவர் மருத்துவமனையில் மரணம்!

### பரந்தனில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 06

வீதியில் படுகாயமடைந்த நிலையில் குற்றுயிராக மீட்கப் பட்டவர் கிளிநொச்சி மருத்து வமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் அறிய வருவதாவது, ஏ-9 வீதியில் பரந்தன் சந் திக்கு அண்மையாக நேற்று முன்தினம் இரவு குற்றுயிரான நிலையில் கிடந்த ஒருவரை கடை உரிமையாளர் ஒருவர் கண்டுள்ளார்.

அவர் 1990 அவசர அம்பு லன்ஸ் சேவைக்கு அளித்த தகவ லின் அடிப்படையில், குற்றுயி ராகக் கிடந்த நபர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். எனினும் அவர் சிறிது நேரத்திலேயே மரணமானார்.

உயிரிழந்தவரின் உடலில் போத்தல் ஓடுகள் மீட்கப்பட் டன என்றும் அதிக இரத்தப் போக்கு காரணமாகவே அவர் உயிரிழந்தார் எனவும் முதல் கட்ட விசாரணைகளில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித் தனர். இதேசமயம், அந்தப் பகுதியி லுள்ள சி. சி. ரீ. வி. கமெராவி லும் இந்தச் சம்பவம் பதிவாகி யுள்ளது என்றும் அறிய வரு கின்றது.

இந்த மரணம் குறித்து கிளி நொச்சி பொலிஸ் பிரிவின் விசேட குற்றத் தடுப்பு பிரிவி னர் விசாரணைகளை ஆரம்பித் துள்ளனர். (ஐ)

## ஒட்டுவேலை செய்தபோது மோ. சைக்கிள் தீக்கிரை!

யாழ்ப்பாணம், ஜூன் 06

கோண்டாவிலில் வாகன திருத்தகம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் தீப் பற்றியதில் முழுமை யாக தீயில் எரிந்து நாசமானது.

ஒட்டுவேலைக்காக ஒப் படைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளை ஊழியர்கள் ஒட்டிக்கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பெரும்பாலான பகுதிகள் தீயில் எரிந்தன. (ஐ)

# வடக்கு விவசாயிகளுக்கு உர மானியம் வழங்குங்கள்!

## இந்திய அரசுக்கு சிறிதரன் எம். பி. கடிதம்

கிளிநொச்சி, ஜூன் 06

வடக்கு மாகாண விவசாயிகளுக்கான உர மானியத்தை பெற்றுத் தரக் கோரி பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் இந்திய துணை தூதருக்கு அவசர கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தற்போது விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு தொடர்ந்தும் பெரும் நெருக்கடி நிலை காணப்படுகின்றது.

குறிப்பாக, வடக்கு மாகாணத்தில் விவசாயிகளுக்கு தேவையான உரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

தற்போதைய நிலையில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு நாற்பது நாட்களை தாண்டியும் அதற்குரிய உரங்கள் கிடைக்கப் பெறாமையால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 81 ஆயி



ரத்து 205 ஏக்கர் நிலப் பரப்பில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் உரம் மற்றும் கிருமி நாசினிகளை பெற்றுக் கொள்ள வழிவகை அற்றுப் போய் உள்ளதால் வடக்கு மாகாணத்தில் ஒட்டுமொத்த விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் விவசாயிகளுக்கான உரத்தை பெற்றுக் கொடுக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திய துணைத்தூதுவர் ஸ்ரீ ராகேஸ் நடராஜ் அவர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார். (ஐ)

# 21ஆம் திருத்தம் நிறைவேறினால் 10 எம்.பிக்கள் பதவியை இழப்பர்!

**கொழும்பு, ஜூன் 06**

**இரட்டைக் குடியுரிமை உடைய 10 அரசியல்வாதிகள் தற்போது பாராளுமன்றத்தில் உறுப்புரிமை வகிக்கின்றனர் என்று ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பதவி வகிப்பதற்கு அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தச் சட்டமூலம் நிறைவேறினால் அந்த 10 பேரும் எம்.பி. பதவியை இழக்க நேரிடும் எனத் தெரியவருகின்றது.

21 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் உள்ள ‘இரட்டைக் குடியுரிமை தடை’ என்ற ஏற்பாட்டை நீக்குவதற்கு இவர்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேற்படி 10 பேரில் மலையக அரசியல்வாதி ஒருவரும் உள்ளடங்குகின்றார். எனினும், வீசா இன்றி இந்தியாவுக்குச் செல்வதற்கான ஓர் ஏற்பாட்டையே அவர் வைத்துள்ளார் எனவும், அது இரட்டைக் குடியுரிமை அல்ல எனவும் தெரியவருகின்றது. எனவே, 21 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேறினால்கூட அவரின் பதவிக்குச் சிக்கல் ஏற்படாது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# மக்கள் கஞ்சி குடிப்பதற்காகவேனும் பசளையை இறக்குமதி செய்யுங்கள்!

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

மன்னார், ஜூன் 06

பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்றபோது கஞ்சியாவது குடித்து மக்களின் இருக்கும் வாழ்க்கையை உண்டு பண்ணலாம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பொருளாதார நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், விவசாயிகள் சேமித்து வைத்த அரிசிகள் அனைத்தும் இரண்டு , மூன்று மாதங்களில் முடிவடையக் கூடிய வாய்ப்புகள் இருக்கின்றது. இனிவரும் காலங்களில் பட்டினி சாவுகள் வருவதற்கான வாய்ப்புகளே கூடுதலாக உள்ளது. சாதாரணமாக உழைக்கின்ற அன்றாட கூலி செய்கின்ற மக்களின் நிலைமை மிகவும் மோசமாக, பரிதாபமாக இருக்கின்றது.

அரசாங்கம் முதலில் பசளையை இறக்கி விவசாயிகளுக்கு கொடுக்கின்றபோது கஞ்சியாவது குடித்து மக்கள் இருக்கும் வாழ்க்கையை உண்டு பண்ணலாம். பசளையை இறக்கி விவசாயிகளுக்குக் கொடுப்பதன் ஊடாக நெல் உற்பத்தி பெருகும். அதேபோல் தோட்டங்களை செய்கின்ற போது மரக்கறிகளை செய்கின்ற வாய்ப்புக்களும் ஏற்படும்.

அரசாங்கம் பசளையை விவசாயிகளுக்கு இறக்கி கொடுப்பதன் ஊடாகத்தான் பட்டினியில் இருந்து மக்களை மீட்க முடியும்.

பாரத பிரதமர் இந்த விடயத்திலே கவனம் செலுத்தி உடனடியாக பசளையை தந்துதவுமாறு கேட்டிருக்கின்றேன். பசளை கிடைக்கின்ற போது ஓரளவுக்காவது பட்டினியை நிவர்த்தி செய்கின்ற வாய்ப்புகளை உண்டு பண்ணலாம் என்பது எனது ஆலோசனை என்றும் கூறினார். (ஐ)

# மே 9 வன்முறைகள் தொடர்பில் 856 முறைப்பாடுகள் பதிவாகின

கொழும்பு, ஜூன் 06

நாடளாவிய ரீதியில் கடந்த மே மாதம் 09 ஆம் திகதி ஏற்பட்ட வன்முறைகள் தொடர்பில் இதுவரை 856 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துரைத்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

முறைப்பாடுகளுக்கு அமைவாக இதுவரை 2,393 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை 45 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 1,055 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பொலநறுவை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமர்கீர்த்தி அத்துக்கோரள கொலை செய்யப்பட்டமை தொடர்பில் வெள்ளிக்கிழமை இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கலகெடி, பஸ்யால ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 30, 33 வயதுகளையுடைய இருவரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கொழும்பு காலி முகத்திடலில் கடந்த 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் 14 பேரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர் என்றும் அவர் கூறினர். (கே)

# ஜனாதிபதி விலகுவதால் நெருக்கடி தீர்ந்துவிடாது!

## நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஜூன் 06

ஜனாதிபதி பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகுவதன் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது என்று முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிரதமர் பதவியிலிருந்து மகிந்த ராஜபக்ஷ விலகியமை துரதிர்ஷ்டவசமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் சி என் என் தொலைக்காட்சிக்கு அவர் அழைத்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

“முன்னோடியான கலந்துரையாடல் மேற்கொண்டு புரிந்துணர்வை ஏற்படுத்தி முன்னேறுவதே நாட்டை முன்னோக்கிச் செல்ல ஒரே வழி. அனைவரையும் ஒன்றிணைத்து நாட்டின் எதிர்கால அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலில் பணியாற்றுவது மிகவும் அவசியம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக உயர் பதவியில் இருப்பவர்களை பதவி விலகுமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். பதவி விலகல் மூலம் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியாது.

நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பேன்” - என்றார். (ஐ)

# விசேட அதிரடிப் படையினரின் சுற்றிவளைப்பில் 11 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 06

நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புகளில் போது, பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 11 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மூன்று மதுபானம் சார்ந்த சுற்றிவளைப்புகளில் மூவர் கைதுசெய்யப்பட்டனர். அத்துடன், 61.75 லீற்றர் மதுபானம் கைப்பற்றப்பட்டது.

கேகாலை, குருணாகல் ஆகிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 10 கிராம் ஹெரோயினுடன் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரம்புக்கனை, போயகனே ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 21, 24, 29, 25 மற்றும் 24 வயதுகளையுடைய ஐவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை தெனியாய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்திலுள்ள காட்டில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பானகல பிரதேசத்தைச் சேர்ந்த 27, 31 வயதுகளையுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹொரண பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 07 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பண்டாரகம பிரதேச்தைச் சேர்ந்த 25 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். (கே)

# லாஃப் எரிவாயு விலை அதிகரிக்கப்பட்டது?

கொழும்பு, ஜூன் 06

லாஃப் எரிவாயுவின் விலைகள் அதிகரிக்கப்பட்டதாக அந்த நிறுவனத்தின் விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி 12.5 கிலோ எரிவாயு சிலிண்டரின் புதிய விலை. 6,850 ரூபாய் மற்றும் 5 கிலோ எரிவாயு சிலிண்டர் . 2,740 ரூபாய் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், லாஃப் எரிவாயு விலை உயர்வு குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதையும் இதுவரை வெளியிடவில்லை.

அத்தோடு லிட்ரோ எரிவாயு சிலிண்டர்களின் விலையில் மாற்றம் இல்லை. பல மாதங்களுக்குப் பிறகு அடுத்த வாரம் முதல் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வெளியிட எதிர்பார்ப்பதாக லாஃப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

# வட,கிழக்கு மீனவர், விவசாயிகளுக்கு இந்திய ஏற்பாட்டில் மண்ணெண்ணெய்

யாழ்ப்பாணம், ஜூன் 06

வடக்கு, கிழக்கு மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைக்கு அமைய அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க இந்திய தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியால் மண்ணெண்ணெய்க்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. கள்ளச் சந்தையில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 400 ரூபாய் வரையில் விற்பனையாகிறது.

இந்த விடயம் குறித்து யாழ். இந்திய துணைத் தூதரகத்துக்கு சுட்டக் காட்டப்பட்டதையடுத்து விவசாயிகள், மீனவர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயை இலவசமாக வழங்க துணைத் தூதரகம் முயற்சிகளை எடுத்துள்ளது.

இந்த மண்ணெண்ணெயை காங்கேசன்துறை ஊடாக அல்லது கொழும்பு ஊடாக எடுத்து வருவதற்கான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அறிய வருகின்றது. (ஐ)

ஈழநாடு



முனைவர் பா. சக்திவேல்

(ஜூன் 5) உலக சுற்றுச்சூழல் நாள்



# சூழல் காத்தல் தலையாய கடமை

பூமி அழகானது! அனைத்து உயிர்களின் வாழ்விடமாக, சூரிய குடும்பத்துக்குள் உயிர்களின் பிறப்பிற்குரிய வீரிய கோளாக அண்ட வெளியில் உலவி வருவது இயற்கையின் அதிசயம். வானியல் அறிஞர்களும், அறிவியல் ஆராய்ச்சியாளர்களும் இரவு பகலாகக் கண்விழித்து பூமிபோல வாழ்வதற்கு இணக்கமாக இன்னொரு கோள் இந்த பிரபஞ்சத்தில் வேறெங்காவது இருக்கிறதா என ஆய்வு செய்து வருகின்றனர். அப்படி எந்தக்கோளும் இருப்பதாக இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இத்தனை அதிசயத்தையும், அற்புதத்தையும், மகத்துவத்தையும், அரிய தன்மையையும் தன்னகத்தே கொண்டுள்ள பூமி இங்கு வாழும் லட்சக் கணக்கான வகைகளைக் கொண்ட பலவகை உயிர்களுக்கும் பொதுவானது. அதை நாமே ஆட்கொண்டு, அபகரித்து, துடைத்தழித்து துவம்சம் செய்வதில் என்ன பெருமை இருக்கப்போகிறது.

நம் சந்ததியினருக்கு மிகப்பெரிய செல்வங்களாக, மனை, மாடு, மக்கள், மண், பொன், பொருள் என எல்லாவற்றையும் சேர்த்து வைத்துச்செல்ல வேண்டும் என நினைக்கிறோம். ஆனால் கிடைத்தற்கரிய, மனிதனால் செயற்கையாக உருவாக்க முடியாத இயற்கைச் செல்வத்தை அப்படியே, சிந்தாமல் சிதறாமல் அடுத்த தலைமுறைக்கு கொண்டுபோய் சேர்க்கும் பொறுப்பு ஒவ்வொரு பிறவிக்கும் உண்டு என்பதை மறந்து விடுகிறோம்.

நதிக்கரை ஓரம் நாகரிகம் பிறந்ததென்று படித்தோம் அன்று ஆற்றங்கரைகளை ஆக்கிரமித்தல், அபகரித்தல், ஆற்று நீரில் தொழிற்சாலைக் கழிவுகளை கலந்துவிடுதல் என்று அநாகரிகத்தின், அட்டூழியத்தின் தொட்டிலாக, அபாயத்தின் கட்டிலாக, குப்பை கொட்டிலாக நதிக்கரை மாறிவிட்டது இன்று. ஆற்று மணலை தோண்டி ஊற்று நீர் பருகினோம் அன்று ஆற்றுமணலைத் தோண்டி ஆதாயம் பாக்கிறோம் இன்று.

விளைநிலங்கள் விலைநிலங்களாக மாறி வீட்டு மனைகளாக உருவெடுத்தன. மலைகள் கல்குவாரிகளாக குடைந்தெடுக்கப்பட்டன. குளிர் சோலைகளும், தளிர் மரங்களும் தார்சாலை களாலும், கான்கீரீட் காடுகளாலும் கபளீகரம் செய்யப்பட்டன. குளங்கள் குடியிருப்புகளாயின, ஏரிகள் ஏரியாக்களாக பரிணாம வளர்ச்சி பெற்றன. தொழிற்சாலை மண்ணை மலடாக்கியது காற்றை நஞ்சாக்கியது நீரை பாழாக்கியது.



ஒன்று இன்னொன்றை சார்ந்து வாழும் உணவுச் சங்கிலியை உடைந்தெறிந்த பெருமை மனிதனை அல்லது பருவகால மாற்றங்களைச் சாரும். காற்று மாசடைவது, வெப்பநிலை உயர்து, முறையற்ற பெருமழை, புயல் காற்று, வறட்சி, பூமித்தட்டுகள் இடம் பெயர்வ், பனிப்பாறைகள் உருகுவது, ஓசோன் படலம் அழிவது, பசுமை இல்ல வாயுக்களின் வேறுபாடு, கடல் மட்டம் உயர்து, நிலத்தடி நீர்றைதல், சுரங்கம் அமைப்பதில் மூலம் தாதுக்கள் வெளிக்கொணர்ல், நிலக்கரி, பெட்ரோல் உள்ளிட்ட எரிபொருள் எடுத்தல், காட்டுத்தீ என அனைத்தும் விளைவது மனிதனின் செயல்பாடுகளால்தான்.

நகரமயமாக்கல், பொருளாதாரா சிறப்பு மண்டலம் அமைத்தல், தொழில்நுட்ப பூங்கா அமைத்தல், அணு உலைகளை அணிவகுக்கச் செய்தல், அணைக்கட்டு கட்டுதல், சுரங்கம் அமைத்தல் என்கிற பெயர்களில் காடும் காடு சார்த இடமும், நீர்நிலைகளும், கடலோர பகுதிகளும் பெரிதும் வளைத்தெடுக்கப்படுகின்றன.

முன்னேற்றம், வளர்ச்சி, மேம்பாடு இவை எதுவுமே இயற்கை வளங்களை அழித்து கட்டமைக்கப்படக்கூடாது. எந்த இயற்கை வளத்தையும் சிதைக்காத வளர்ச்சியைத்தான் 'வளங்குன்றா வளர்ச்சி' என அழைக்கின்றார்கள். இதைச் சார்ந்தே உலகத்தில் உள்ள எந்த ஒரு நாட்டின் வளர்ச்சித் திட்டங்களும், அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாடுகளும் அமையவேண்டும்.

> கடந்த நூற்றாண்டில் உலகத்தில் இருந்த மொத்த சதுப்பு நிலங்களில் பாதியை நாம் இழந்து விட்டோம். 2050-ஆம் ஆண்டுக்குள் 90 வீத வளப் பாறைகளை இழந்து விடுவோம் என புவி வெப்பமயமாகுதல் குறித்த தனது அச்சத்தை ஐ.நா சபை வெளியிட்டுள்ளது. இந்த அழிவிலிருந்து இயற்கையை மீட்டெடுக்க வேண்டியது மனித குலத்தின் தலையாய கடமை.

கடந்த நூற்றாண்டில் உலகத்தில் இருந்த மொத்த சதுப்பு நிலங்களில் பாதியை நாம் இழந்து விட்டோம். 2050-ஆம் ஆண்டுக்குள் 90 வீத வளப் பாறைகளை இழந்து விடுவோம் என புவிவெப்பமயமாகுதல் குறித்த தனது அச்சத்தை ஐ.நா சபை வெளியிட்டுள்ளது. இந்த அழிவிலிருந்து இயற்கையை மீட்டெடுக்க வேண்டியது மனித குலத்தின் தலையாய கடமை. இதனை மையமாகக் கொண்டுதான் 'ஒரே ஒரு பூமி' என்ற வாசகம், இந்த ஆண்டின் உலக சுற்றுச்சூழல் நாள் கோட்பாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரியவகை உயிரினங்கள், ஊர்வன, பறப்பன, நீர் வாழ்வன, நுண்ணிய பூச்சி இனங்கள், மூலிகைகள், தாவரங்கள், விலங்குகள் என எத்தனையோ வகையான உயிரினங்கள் இந்த உலகத்தில் முற்றாக அழிந்து விட்டன. நிறைய உயிரினங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. இவற்றை அடையாளம் கண்டு காப்பாற்றுவதற்காக உலகத்தில் உள்ள பல சூழலியல், உயிரியல், வன அமைப்புகள் செயலாற்றி வருகின்றன. சட்டங்களும் கடுமையாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு நாட்டிற்கும், மாநிலத்திற்கும், ஏன் அந்த மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதர்க்கும் பாரம்பரியமான செடிகளை, உயிரினங்களை காப்பாற்றும் சமூகப் பொறுப்பு உள்ளது. அப்போதுதான் தப்பிப்பிழைத்திருக்கின்ற உயிர்களையாவது, தக்கவைத்துக்கொள்ளக் கூடிய நிலை உருவாகும்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் என்ற வள்ளுவரின் குறளைப் பின்பற்றுவோம். எல்லா உயிர்களையும் வாழவைக்க முடியாவிடினும் போராடி வாழ்ந்து கொண்டிருக்கும் உயிர்களுக்கு ஊறு விளைவித்து மாபாதகம் செய்யாமலாவது இருப்போம்.

'முகத்தில் பாதி வாயிருக்கும், முழு நீள நாக்கிருக்கும், மனதிலே பேயிருக்கும், மறையாத நோயிருக்கும் வனத்திலே கொண்டுபோய் விட்டுவிட்டால் மிருகமெல்லாம் வரவேற்கும்' என்று கவிஞர் கண்ணதாசன் மனிதனை மிருகத்தோடு ஒப்பிட்டு வேடிக்கையாகச் சொல்லுவார். நாம் அதை உண்மையாக்கி விடக்கூடாது.

ஒருயிர்க்கும் துன்பம் செய்யாது, வளங்களை அழித்தொழிக்காது, அளவான, முறையான பயன்பாட்டோடு இந்த இயற்கையையும், பூமியையும் செழிக்க வைப்போம். இந்த பூமியில் வாழும் அனைத்து உயிரினத்தையும் மதிப்போம், வாழவைப்போம்.

மனிதர்களைப் போலவே அனைத்து உயிர்களுக்கும் இந்த உலகத்தில் வாழ எல்லா உரிமையும் உள்ளது.




பிரதமர் அலுவலகம் கொழும்பு

# இலங்கை நெருக்கடி: வரி அதிகரிப்பால் அரசுக்கு எவ்வளவு கூடுதல் வருமானம்? மக்களுக்கு என்ன ஆகும்?

ரஞ்சன் அருண்பிரசாத்

இலங்கை பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ள இந்தத் தருணத்தில், வரி விகிதங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, 8 வீதமாக காணப்பட்ட பெறுமதி சேர் வரியை, இந்த மாதத் தொடக்கம் முதல் அமலுக்கு வரும் வகையில் 12 வீதம் வரை அதிகரித்துள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவிக்கிறது.

இதன்படி, பெறுமதி சேர் வரியின் ஊடாக 2022-ஆம் ஆண்டு 91 பில்லியன் ரூபாய் திரட்ட உத்தேசிக்கப்பட்ட நிலையில், புதிய வரி அதிகரிப்பின் ஊடாக அந்தத் தொகை 156 பில்லியன் ரூபாய் வரை அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவிக்கிறது.

அத்துடன், 11.25 வீதமாக காணப்பட்ட தொலைத்தொடர்பு வரியானது, 15 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு வரியின் ஊடாக 2022-ஆம் ஆண்டு 3 பில்லியன் ரூபாய் வருமானம் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அந்தத் தொகையானது புதிய வரி அதிகரிப்பால், அந்த வரி மூலமான உத்தேச வருவாய் எதிர்பார்ப்பு 5 பில்லியன் ரூபாயாக அதிகரித்துள்ளது.

பெறுமதி சேர் வரி மற்றும் தொலைத்தொடர்பு வரி ஆகியவற்றின் ஊடாக ஏற்கெனவே 94 பில்லியன் ரூபாய் மேலதிக வருமானமாக எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது அந்தத் தொகை 161 பில்லியன் ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

அதேபோன்று, 2022-ஆம் ஆண்டு அக்டோபர் 1 முதல் அமலுக்கு வரும் வகையில் மேலும் சில வரிகள் அதிகரிக்கப்படவுள்ளதாக பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஆண்டு ஒன்றுக்கு 3 மில்லியன் ரூபாயாகக் காணப்பட்ட தனிநபர் வருமான வரி வரம்பு, எதிர்வரும் அக்டோபர் 1 முதல் 1.8 மில்லியன் ரூபாய் வரை குறைக்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தனிநபர் வருமான வரியின் ஊடாக 2022ம் ஆண்டு 5 பில்லியன் ரூபாய் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த புதிய வரி நடைமுறையின் கீழ் அந்த தொகை 20 பில்லியன் ரூபாய் வரை அதிகரிக்கவுள்ளது.

எதிர்வரும் அக்டோபர் மாதம் முதல் 1.8 மில்லியன் ரூபாய் வருடாந்த வருமானத்தைப் பெறும் தனிநபர்கள் வருமான வரி செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.




## “பட்டினி சாவுக்குக் கொண்டு செல்லும்”

உள்நாட்டு இறைவரிச் சட்டம், பெறுமதி சேர் வரி சட்டம், தொலைத்தொடர்பு வரி சட்டம், பந்தயம் மற்றும் விளையாட்டு வரி சட்டம், நிதி முகாமைத்துவ சட்டம், தனிநபர் வருமான வரி சட்டம், பன்னாட்டு வருமான வரி அதிகரிப்பு உள்ளிட்ட மேலும் பல வரி சட்டங்கள் திருத்தப்படவுள்ளன.

இந்த வரி திருத்தங்கள் பொதுமக்கள் வாழ்க்கையில் எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தும் என்பது தொடர்பில் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் எஸ்.விஜேசந்திரன் கருத்து வெளியிட்டார்.

“நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார சிக்கல், பண வீக்கம், வாழ்க்கை செலவோடு ஒப்பிடும்போது, இந்த வரி அதிகரிப்பானது, மக்களுக்கு மேலதிக சுமை யாகவே இருக்கும் என்று நான் பார்க்கின்றேன். வாழ்க்கை செலவு 300 மடங்கு அதிகரித்துள்ளது. பொருட்களின் விலை 300 மடங்கு அதிகரித்திருக் கின்றது. பொருட்களுக்குத் தட்டுப்பாடு, மாதாந்தம் சம்பளம் எடுக்கின்றவர்களுக்கு அவர்களின் வருமானம் அதிகரிக்கவில்லை. அன்றாட தொழில் செய்பவர்களுக்கு வருமானம் இல்லை.”

> நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார சிக்கல், பண வீக்கம், வாழ்க்கை செலவோடு ஒப்பிடும் போது, இந்த வரி அதிகரிப்பானது, மக்களுக்கு மேலதிக சுமை யாகவே இருக்கும் என்று நான் பார்க்கின்றேன். வாழ்க்கை செலவு 300 மடங்கு அதிகரித்துள்ளது. பொருட்களின் விலை 300 மடங்கு அதிகரித்திருக்கின்றது.

“பெரும்பாலான வணிக நிறுவனங்கள் தங்களுடைய வியாபார நடவடிக்கைகளை மூடியுள்ளனர். லாபத்தை எட்டுவதை விட, செலவை கூட ஈடு செய்ய முடியாத நிலைமையில் பல நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிலைமையில் அரசாங்கம் வரியை கூட்டியிருப்பதற்கான ஒரேயொரு காரணம் என்னவென்றால், அரசாங்கத்தின் வருமானத்தை ஈடு செய்து கொள்வதற்காக வரும் மாதங் களில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்குக் கூட பணம் இல்லை என பிரதமர் அண்மையில் கூறியிருந்தார்.

ஆகவே நிதிப் பற்றாக்குறையை தீர்த்துக் கொள்ளவே அரசாங்கம் இதைச் செய்திருக்கிறது,” என பேராசிரியர் கூறினார்.

“சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரி அதிகரிப்பானது, இலங்கை மக்களை பட்டினி சாவுக்குக் கொண்டு செல்லும்“ என அவர் கூறுகிறார்.

“பொருட்களின் விலைகள் மீண்டும் 60 - 70 சதவிகிதம் அதிகரிக்கும். வரி விதிப்பை வர்த்த கர்கள், பொருட்களை கொள்வனவு செய்யும் மக்கள் மீதே சுமத்துவார்களே தவிர, அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆகவே பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும்.


அரிசி விலை கிட்டத்தட்ட 400 ரூபாய்க்கு போகக்கூடிய நிலைமை ஏற்படும். இந்த வரி அதிகரிப்புக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையே பிரதான காரணம். சர்வதேச நாணய நிதியம் கொடுத்த 3 நிபந்தனைகளில் இதுவும் ஒன்று.


சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் மக்கள் மீது இந்தச் சுமையை சுமத்துகின்றது. வரி அதிகரிப்பு மாத்திரம் அல்லாமல், சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக்கொண்டால், அந்த கடனைச் செலுத்தும் சுமையும் மக்கள் மீதே சுமத்தப்படும்.

ஆகவே இலங்கை தொடர்ந்தும் கடன் நச்சு வட்டத்திற்குள் சுழல்வதற்கும் வருமான பற்றாக்குறை நச்சு வட்டத்திற்குள் சுழல்வதற்கும் இது காரணமாக இருக்கும். மேன்மேலும் மக்களை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளுவதன் ஊடாக, மக்களை பட்டினி சாவு நிலைமைக்குக் கொண்டு செல்ல இது வழி வகுக்கும்,” என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை பேராசிரியர் எஸ்.விஜேசந்திரன் குறிப்பிடுகின்றார்.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1)
2)
3)

38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?







1) 2) 3)

* ⌗ * ⌗

39. 3 4 3 = 15 இங்கு ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x, + 2) +, x 3) x, -

40. 

1)  2)  3) 

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) “நவீன” என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) “எழில்” என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

02) அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

**37. 1 38. 2 39. 1 40. 2**

01. 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

02. விழுகின்றன

03. அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

04. 1) × 2) ✓ 3) × 4) ×

05. ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

## கல்வி tv CHANNEL-1

**06.06.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**06.06.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வாவிக்கரையோரத்தில் நேற்று சிரமதான பணி!

மட்டக்களப்பு, ஜூன் 06

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு நகரின் வாவிக்கரையை துப்புரவு செய்யும் சிரமதான பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு சமூக நலன் சார் பணியாளர்களால் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்கவல்ல பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன்கள் வாவிக்கரையோர பகுதிகளிலிருந்து அகற்றப்பட்டன.

“உலகம் ஒரு புவியியல் கோலம்“ எனும் 2022 ஆம் ஆண்டுக்கான தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட இந்த சிரமதானப் பணியில் சமூக நலன் விரும்பிகள், இளைஞர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)



# டெங்கைக் கட்டுப்படுத்த வீடுகள்தோறும் சோதனை



கல்முனை, ஜூன் 06

சாய்ந்தமருது சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த வீடுகள் தோறும் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் நுளம்புகளின் செறிவு அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. நுளம்பு பெருகும் விதமாக வீடுகளை பேணியமையே இதற்குகக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இதையடுத்து, வீடு வீடாகச்சென்று பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தலைமையிலான குழுவினர் பரிசோதனையில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர். இதன் போது நுளம்பு பெருகுவதற்கு ஏதுவான இடங்கள் கண்டுபிடிக்கப்படுமாயின், சம்பந்தப்பட்டவர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென சுகாதாரத்துறை அறிவித்துள்ளதுடன் தங்களது வீட்டையும் அதனைச்சூழவுள்ள இடங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு மக்களை பணித்துள்ளனர்.

மேலும், எதிர்வரும் மழைக்காலங்களில் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் என்பதுடன், நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த தங்கள் வீட்டு வளவுகளை சுத்தம் செய்வதோடு தங்கள் வீடுகளில் காணப்படும் நுளம்புகள் பெருவதற்கு ஏதுவான பொருட்கள் அழிக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தலைமையிலான பணியாளர் குழு மக்களை அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# சிங்கள தலைவர்களின் இனத்துவேசமே நாட்டின் மோசமான நிலைக்கு காரணம்!

## கலையரசன் எம். பி. குற்றச்சாட்டு



**திருக்கோவில், ஜூன் 06**

**நாட்டின் சிங்களத் தலைவர்கள் தமது இனத்துவேசத்தின் உச்சமான ஆட்சியால் இந்த நாட்டை மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியிருக்கின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.**

திருக்கோவிலில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“ஓர் இனம், சமூகம் வாழ வேண்டுமாக இருந்தால் அந்த இனத்தின் இருப்பு மிக முக்கியமானது. அந்த அடிப்படையில் தான் எமது உறவுகள் எமது சமூகத்துக்காக நீண்ட ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருந்தார்கள்.

இந்தப் போராட்டம் எதற்கானது என்பதை தற்போதிருக்கின்ற இளைஞர்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய, அவர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த நாடு சுதந்திரம் அடைந்தபொழுது அந்நியர்களிடம் இருந்து நாட்டின் சுதந்திரத்தைப் பெற்றெடுப்பதற்குத் தமிழர்களும் இணைந்தே போராடியிருந்தார்கள். ஆனால், சுதந்திரம் பெற்ற கையோடு தமிழர்கள் புறக்கணிககப்பட்டமையும், வெளியேற்றப்பட்டமையுமே வரலாறாக இருக்கின்றது.

அந்த அடிப்படையில் தமிழர்கள் ஜனநாயகம், ஆயுதம் என்ற ரீதியில் போராட்டங்களை நடத்தினர். இன்று ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டிருந்தாலும் எமக்கான ஜனநாயகம் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்ற விதத்தில் எங்களுடைய போராட்டம் இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இன்று இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி என்பது இந்த நாட்டின் சிங்களத் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒன்று. இந்த நாட்டை மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளும் செயல்பாட்டையே இந்த நாட்டின் தலைவர்கள் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்ற விடயத்தை நாங்கள் தொடர்ச்சியாகக் கூறி வந்திருக்கின்றோம். அதனை இப்போது இந்த நாட்டின் சகல மக்களும் உணர்ந்திருக்கின்றார்கள்.

ஒரு குடும்பம் இந்த நாட்டை அழித்திருக்கின்றது என்ற செய்தியைத் தான் உலகமே சொல்லிக் கொண்டிருக்கின்றது.

இந் நாட்டிலே ஒரு நிலையான சமாதானம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் உலக நாடுகள் சொல்கின்ற உதாரண நாடாக இந்த நாடு மிளிர்ந்திருக்கும். 1983ஆம் ஆண்டு ஜூலைக் கலவரம் ஏற்படுத்தப்பட முன்னர் இந்த நாட்டின் பல இடங்களில் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்தவர்களாகத் தமிழர்களே இருந்தார்கள். இன்று அது கேள்விக் குறியாக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயங்கள் எல்லாம் இந்த நாட்டில் இருக்கின்ற தலைவர்களுக்குத் தெரியும்.

அவர்கள் இனத்துவேசத்தின் உச்சத்தில் இருந்து அரசியல் செய்பவர்களாகவே இருந்திருக்கின்றார்கள்.

தமிழர்களாகிய நாங்கள் இந்த நாட்டிலே நீண்ட காலமாக அடக்குமுறை, வறுமை என்பவற்றைச் சந்தித்தவர்கள். தற்போதிருக்கின்ற சவாலையும் எமது மக்கள் ஏற்று எமது சமூகத்தை மாற்றியமைக்கக் கூடிய செயல்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். நாங்களும் இந்தச் சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடியவர்களாக எம்மை மாற்றி இந்த சமூகத்தை வாழ வைக்க வேண்டும் - என்றார். (ஐ)

# சிவகுமாரன் நினைவேந்தல் வவுணதீவில் கடைப்பிடிப்பு

## பொலிஸார் தீவிர விசாரணை



வவுணதீவு, ஜூன் 06

தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் முதல் வித்தான தியாகி பொன். சிவகுமாரனின் 48ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று மட்டக்களப்பு வவுணதீவில் இடம்பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வு அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது, பொன்.சிவகுமாரனின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டு, ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலரஞ்சலி செலுத்தபபட்டதை தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதேவேளை நினைவு தினம் நிறைவுபெற்ற வேளையில் அங்கு வந்த வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் இந்த நிகழ்வு குறித்து விசாரணைகளை முன்னெடுத்ததுடன் நிகழ்வில் நின்றவர்களையும் காணொலி பதிவு செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் மற்றும் இளைஞர் அணி தலைவர் இ. சத்தியசீலன் ஆகியோர் பொலிஸாருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# மாணிக்கப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம் இடம்பெற்றது!



திருக்கோவில், ஜூன் 06

அம்பாறை - திருக்கோவில் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலய சங்காபிஷேகம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த சங்காபிஷேகம், திருக்கோவில் ஸ்ரீசித்திர வேலாயுத சுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஷ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இதன்போது, ஆலயத்தில் வேதாகம மந்திரங்கள் ஒலிக்க விஷேட ஹோமங்கள் வளர்க்கப்பட்டு சங்காபிஷேக திருவிழா இடம்பெற்று இருந்தன.

அடியார்களின் அரோஹரா கோசத்துடன் நாதஸ்வர வாத்தியங்கள் முலங்க ஆலய பிரதம குருவால் பிரதான கும்பம் ஆலய உள் வீதி வலம் வந்து 108 சங்குகள் கொண்டு மூலமூர்த்தியாக வீற்றிருக்கும் விநாயகப் பெருமானுக்கு சங்காபிஷேகம் இடம்பெற்றதுடன், விநாயகப் பெருமானுக்கு விசேட பூசைகளும் இடம் பெற்றன. (ஐ)

# அமெரிக்காவில் மர்மநபர்களின் துப்பாக்கி சூட்டில் மூவர் மரணம்!



வாஷிங்டன், ஜூன் 06

அமெரிக்காவின் பிலடெல்பியாவில் மக்கள் கூட்டத்தின் மீது மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் திடீர் தாக்குதலை தொடர்ந்து அந்தப் பகுதியில் நின்றிருந்த பொலிஸார் பதில் தாக்குதலை தொடுத்தனர்.

இதில், மர்ம நபர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது. எனினும், மர்ம நபர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று அறியவருகின்றது.

ஆனாலும், மர்ம நபர்களின் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 25 வயது பெண் மற்றும் 22 வயது ஆண் ஆகிய இருவர் அடங்குவர்.

நடப்பு ஆண்டில் மட்டுமே 140க்கும் மேற்பட்ட துப்பாக்கி சூடு சம்பவங்கள் நடந்துள்ளன என துப்பாக்கி வன்முறைக்கான ஆய்வில் தெரிய வந்துள்ளது. (ஐ)

# பங்களாதேஷில் களஞ்சியத்தில் தீ; 34 பேர் பலி; 100 பேருக்கு மேல் காயம்!

டாக்கா,ஜூன் 06

**பங்களாதேஷில் களஞ்சிய கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட தீ மற்றும் பெரும் வெடிப்பு சம்பவத்தில் 34 பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

தென்கிழக்கு நகரமான சிதகுண்டா விலேயே இந்தத் தீ மற்றும் வெடிப்பு சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.

சுமார் 30 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இந்த கொள்கலன் சேமிப்புக் கிடங்கை பொதுமக்கள் அணைக்க முயன்றபோது வெடிப்பு சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் 34 பேர் உயிரிழந்த நிலையில், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை. சேமிப்புக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்த சில கொள்கலன்களில் இரசாயனங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தன என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



சேமிப்பு கிடங்கில் ஏற்பட்ட வெடிப்பால் அருகே உள்ள பல கட்டடங்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. 4 கி.மீ. தொலைவு வரை பாதிப்புக்கள் உணரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஆயுதங்களை சுமந்து சென்ற உக்ரைன் விமானம் சுடப்பட்டது!



**ரஷ்யா அறிவிப்பு**

மொஸ்கோ, ஜூன் 06

கருங்கடல் துறைமுகமான ஒடேசா அருகே ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளை ஏற்றிச் சென்ற உக்ரைன் இராணுவ விமானத்தை தமது படை கள் சுட்டு வீழ்த்தின என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், உக்ரைனின் சுமி பிராந்தியத்தில் வெளிநாட்டு பயிற்றுநர்கள் பணியாற்றிய பீரங்கி பயிற்சி மையத்தையும் ஏவுகணை தாக்குதல் மூலம் அழித்ததாக ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு உக்ரைனில் ஸ்வியாடோகிர்ஸ்க் லாவ்ராவில் உள்ள பழமையான மடாலயம் நேற்று முன்தினம் தீப்பற்றி எரிந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்கு 300 அகதிகள், மாற்றுத் திறனாளிகள், முதியோர், 60 குழந்தைகள் உள்ளிட்டோர் தங்கியிருந்தனர் என்று அறிய வந்தது. தெரிய வந்துள்ளது.

ரஷ்ய படைகளின் தாக்குதல்களாலேயே மடாலயம் தீப்பற்றி எரிந்ததாக உக்ரைன் இராணுவ அதிகாரி யூரி கோசேவெங்கோ பேஸ்புக் பதிவில் தெரிவித்துள்ளார். எரியும் மடாலயத்தின் படத்தையும் அவர் வெளியிட்டுள்ளார்.

# விண்வெளி மைய கட்டுமானம்; 3 வீரர்களை அனுப்பியது சீனா!



பீஜிங், ஜூன் 06

சீனா விண்வெளியில் நிறுவி வரும் தனது சொந்த ஆய்வு நிலையத் தின் இறுதிப் பணிகளை நிறைவுறுத்த மூன்று விண்வெளி வீரர்களை நேற்று ஞாயிற்றுக் கிழமை அனுப்பியது.

வடமேற்கு சீனாவில் உள்ள ஜியுகுவான் செயற் கைக்கோள் ஏவுதளத்தில் இருந்து ஷென்சோ-14 என்ற விண்கலம் மூலம் இந்த வீரர்கள் விண்வெளிக்குப் புறப்பட்டனர்.

சீனா தனியாக நிறுவி வரும் தியாங்கொங் (Tiangong) விண்வெளி நிலையத்தில் இந்த விண்கலம் இணைக்கப்பட்டதும் இந்த வீரர்கள் மூவரும் விண்வெளி மையத்தை கட்டமைக்கும் பணிகளில் ஈடுபடுவர்.

இவர்கள் இதற்காகாக 6 மாதங்கள் வரை விண்வெளியில் தங்கியிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மூவரும் தியாங்கொங் விண்வெளி மையத்தை கட்டமைக்க செல்லும் இரண்டாவது குழுவினர் ஆவர்.

தியாங்கொங்கின் கட்டுமானப் பணி இந்த ஆண்டுக்குள் நிறைவடைந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது செயல்படத் தொடங்கினால் தனக்கென்று சொந்தமாக விண்வெளி நிலையத்தை வைத்திருக்கும் ஒரே நாடு என்ற பெருமையை சீனா பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 6,000 வருடங்களில் இல்லாதளவு காபநீர் ஒட்சைட் அதிகரிப்பு!

நியூயோர், ஜூன் 06

புவியின் வளிமண்டலத்தில் கடந்த ஆறாயிரம் வருடங்களில் இல்லாதளவுக்கு காபனீர் ஒட்சைட்டின் அளவு அதிகரித்துள்ளது என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

தொழில் புரட்சி காலத்துக்கு முன்னிருந்த வளிமண்டல காபன் செறிவானது தற்போது தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்நிலையில் சமீபத்தில் வெளியான ஆய்வின்படி,

வளிமண்டலத்தில் காபனின் செறிவு கடந்த மே மாத நிலவரப்படி 419 பி. பி. எம். அலகுகளாக அதிகரித்துள்ளது. இது 2020இல் 417 பி.பி.எம்மாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து பேசிய காலநிலை விஞ்ஞானி பீற்றர் டான்ஸ், "காற்றில் காபனின் செறிவு முன்னெப்போதும் இல்லாத அளவு அதிகரித்துள்ளமை ஆபத்தானது", என்றார்.

தொழில்புரட்சிக்கு முன்பு காபனின் அளவு 280 பி. பி. எம்மாக மட்டுமே இருந்தது. ஆனால், தற்போது 6000 ஆண்டுகள் இல்லாத அளவு காபனின் செறிவு வளிமண்டலத்தில் அதிகரித்துள்ளது. காபனின் செறிவு அதிகரிப்பால் காலநிலை மாற்ற பாதிப்பு வேகமெடுக்கும் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (ஐ)

# கிரேக்கத்தில் காட்டு தீ பரவல் அணைப்பதற்கு தீவிர முயற்சி

எதேன்ஸ், ஜூன் 06

கிரேக்க தலைநகர் எதென்ஸின் தெற்கு கடலோரப் பகுதியில் பெரும் காட்டுத்தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஏற்பட்ட இந்தத் தீ குடியிருப்புப் பகுதிகளுக்கும் பரவியுள்ளது. இதனைக் கட்டுப்படுத்த தீயணைப்பு வீரர்கள் விரைந்து செயல்பட்டு வருகின்றனர்.

பலத்த காற்று வீசியதால் க்ளைபாடா மற்றும் வௌலா பகுதிகளில் உள்ள ஹைமெட்டஸ் மலையின் அடிவாரத்தில் தீ வேகமாக பரவுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீ பரவும் இடங்களிலிருந்து மக்களை வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தீயை அணைக்கும் பணியில் ஆறு தீயணைப்பு



விமானங்கள் மற்றும் 5 ஹெலிகொப்டர்கள் உடன் நூற்றுக்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு கோடையிலும் அதிக வெப்பம் மற்றும் தீ வைப்புகளால் கிரேக்கத்தில் காட்டுத் தீ பரவல் ஏற்பட்டு வருகிறது.

பரந்த ஏதென்ஸ் பகுதி, பெலோபொன்னீஸ் தீபகற்பம் மற்றும் எவியா தீவு ஆகியவற்றில் 2021 ஆம் ஆண்டில் நூற்றுக்கணக்கான காட்டுத் தீ பரவல் ஏற்பட்டது. இதன்போது ஒரு இலட்சம் ஹெக்டெயருக்கு மேற்பட்ட காடுகள், விவசாய - குடியிருப்பு நிலங்கள் அழிவடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இறுதி சுற்றுக்கு டில்லி அணி தகுதி பெறாதது அவமானம்!

**மிற்செல் மார்ஷ்**



கொழும்பு, ஜுன் 06

15ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ரிஷப் பந்த் தலைமையிலான டில்லி அணி இறுதி சுற்றுக்கு தகுதி பெறவில்லை. அந்த அணி 14 புள்ளிகள் எடுத்து 5ஆவது இடத்தை பிடித்தது.

மும்பை அணிக்கு எதிரான தனது கடைசி லீக் ஆட்டத்தில் டில்லி வெற்றி பெற்றால் இறுதிச் சுற்றுக்கு தகுதி பெறலாம் என்ற நிலை இருந்தது. ஆனால், அந்த ஆட்டத்தில் தோற்று டில்லி வெளியேறியது.

இது குறித்து அந்த அணியில் விளையாடிய ஆஸி. வீரர் மிற்செல் மார்ஷ் கூறுகையில், நாங்கள் (டில்லி அணி) ஐ.பி.எல். இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியாமல் போனது அவமானகரமானது. இது வேதனை அளித்தது. ஐ. பி. எல். போட்டி தொடக்கத்தில் எனக்கு சிறிய காயம் ஏற்பட்டது. பிறகு ஒரு போட்டியில் விளையாடினேன். அப்போது கொரோனா பாதிப்பு ஏற்பட்டதால் சற்று நடுக்கம் ஏற்பட்டது. அதன்பின்னர் மீண்டும் போட்டிகளில் விளையாடியது மகிழ்ச்சியாக இருந்தது. நான் 3ஆவது வரிசையில் துடுப்பெடுத்தாட விரும்புகிறேன். அதை 20 ஓவர் கிரிக்கெட்டில் எனது சிறந்த நிலைப்பாடு என்று நான் நிச்சயமாக உணர்கிறேன் - என்றார். (ஐ)



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் நடால் சாதனையுடன் சம்பியன்!

பாரிஸ், ஜுன் 06

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் நோர்வேயின் காஸ்பர் ரூட்டை வீழ்த்தி, ரபேல் நடால் சம்பியன் பட்டத்தை வென்றார்.

இது நடாலின் 14ஆவது பிரெஞ்சு ஓப்பன் பட்டமாகும். ரென்னிஸ் வரலாற்றில் எந்த வீர, வீராங்கனையும் சாதிக்காத சாதனை இதுவாகும்.

இந்த வெற்றியின் மூலம் ஒட்டு மொத்தமாக 22ஆவது கிராண்ட்ஸ்லம் பட்டத்தை வென்றும் அவர் சாதனை படைத்துள்ளார். அவரின் பிரதான போட்டியாளர்களான நோவக் ஜொகோவிச் மற்றும் ரோஜர் பெடரர் இருவரும் தலா 20 கிராண்ட் ஸ்லம் பட்டங்களையே வென்றுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பாரிஸில் நடந்த இறுதிப் போட்டியில் நோர்வேயின் 23 வயதான ரூட், எந்த வகையிலும் நடாலுக்கு சவால் அளிக்கவில்லை.

நடால் ஏன் களிமண் தரையின் ராஜா என வர்ணிக்கப்படுகிறார் என்பது நேற்றைய ஆட்டத்தைப் பார்த்தவர்களுக்குப் புரிந்திருக்கும். பிரெஞ்சு ஓப்பன் இறுதிப் போட்டிக்கு நடால் 14 முறை தகுதி பெற்றார். 14 முறையும் சம்பியன் கிண்ணம் வென்றார். பிரெஞ்சு ஓப்பன் இறுதிப் போட்டியில் தோல்வியடையாத அவரின் சாதனை 14-0 என நீடிக்கிறது. (ஐ)

# சர்வதேச டெஸ்ட் அரங்கில் ஜோ ரூட் 10,000 ஓட்டங்கள்!

லோர்ட்ஸ், ஜுன் 06

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற பெருமையை ஜோ ரூட் படைத்தார்.

இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டியில் சதம் அடித்ததன் மூலமே அவர் இந்த சாதனையைப் படைத்துள்ளார். இந்த சதம் அவரின் 26ஆவது சதமாக அமைந்தது.

நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இந்தப் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் ஜோ ரூட் தனது 26ஆவது சதத்தை விளாசி இருந்தநிலையில், சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற பெருமையை ஜோ ரூட் படைத்தார்.

மேலும் 1990களில் பிறந்து, சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் முறையாக 10 அயிரம் ஓட்டங்களை எட்டியவர் என்ற பெருமையும் ஜோ ரூட் பெற்றார். (ஐ)





# நியூசிலாந்துடனான டெஸ்ட் இங்கிலாந்து அபார வெற்றி!

லோர்ட்ஸ், ஜுன் 06

நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி. இரண்டாவது இனிங்ஸில் ஜோ ரூட் அடித்த சதம் மூலம் இந்த வெற்றி இலகுவாக சாத்தியமானது.

இங்கிலாந்து சென்றுள்ள நியூசிலாந்து அணி, அந்த நாட்டு அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. முதல் டெஸ்ட் போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் நடந்தது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்தப் போட்டியில் முதலில் ஆடிய நியூசிலாந்து அணி 132 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பதிலுக்கு தனது முதல் இனிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணியும் 141 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இரண்டாவது இனிங்ஸில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது நியூசிலாந்து. அந்த அணியின் டரில் மிற்செல் (106 ஓட்டங்கள்) சதம் கடந்தார். இதேபோன்று ரொம் புளுண்டல் (96 ஓட்டங்கள்) சதத்தை நெருங்கிய போதும் 4 ஓட்டங்களால் அதைத் தவறவிட்டு ஆட்டமிழந்தார்.

91.3 ஓவர்களில் 285 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது நியூசிலாந்து அணி.

277 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கியது இங்கிலாந்து அணி. முன்னாள் தலைவர் ஜோ ரூட் அபாரமாக ஆடி 115 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார். ஏனைய வீரர்களும் ஒத்துழைப்பு வழங்கவே 78.5 ஓவர்களில் 5 விக்கெட்களை மட்டுமே இழந்த இங்கிலாந்து அணி 279 ஓட்டங்களைப் பெற்று போட்டியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

போட்டியின் நாயகனாக ஜோ ரூட் தெரிவானார். (ஐ)

# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் இகா ஸ்வியாரெக் சம்பியன்!



பாரிஸ், ஜுன் 06

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை இரண்டாவது தடவையாகக் கைப்பற்றினார் போலந்தின் இகா ஸ்வியாரெக்.

பாரிஸ் ரோலண்ட் கெரொஸ் அரங்கில் நேற்று முன்தினம் நடந்த மகளிருக்கான ஒற்றையர் இறுதிப் போட்டியில் ஸ்வியாரெக் அமெரிக்காவின் கோக்கோவை எதிர்கொண்டார்.

68 நிமிடங்கள் மாத்திரம் நீடித்த இறுதிப் போட்டியில் ஸ்வியாரெக் 6 - 1, 6 - 3 என்ற செற்கள் கணக்கில் வெற்றியீட்டினார்.

இந்த வெற்றி இகா ஸ்வியாரெக்கின் தொடர்ச்சியான 35ஆவது வெற்றியாக அமைந்தது. இதன் மூலம் செரீனா வில்லியம்ஸ் தொடர்ச்சியாகப் பெற்ற 35 போட்டிகள் சாதனையை இகா சமப்படுத்தியுள்ளார். (ஐ)

# ரஷ்ய விமான விவகாரம் வீண் பிரச்னைகளே வரும்!

## எதிர்க்கட்சி தலைவர் எச்சரிக்கை

**கொழும்பு, ஜூன் 06**

**“விமானம் தடுத்துவைப்பு விவகாரத்தால் ரஷ்யாவுடன் வீண் பிரச்னை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. இதனால், எமது நாட்டுப் பொருளாதாரத்துக்கே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அரசின் இயலாமையும் வெளிப்பட்டுள்ளது.” - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ரஷ்யாவின் விமானமொன்று, வணிக நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பை நான் விமர்சிக்கப் போவதில்லை. அதற்கான தார்மீக உரிமையும் எனக்குக் கிடையாது.

ஆனால், இந்தப் பிரச்னை சர்வதேசம் வரை சென்று, இராஜதந்திர நெருக்கடியாக மாறுவதற்கு முன்னர் அதனைத் தீர்த்திருக்கலாம். ஆனால், தாங்கள் தான் சர்வதேச ஜாம்பவான்கள் எனக் கூறிக்கொள்பவர்கள், அதனைச் செய்யவில்லை.

ரஷ்யாவில் இருந்துதான் கூடுதல் சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். அங்கிருந்து விமானம் வருவது தடைப்பட்டுள்ளது. தேயிலை ஏற்றுமதியும் அந்த நாட்டை தங்கியுள்ளது. எனவே, எமது நாட்டுக்குத்தான் பிரச்னை ஏற்படப் போகின்றது” - என்றார். (ஐ)

# விவசாய பிரச்னைகளை தீர்க்க இந்தியா பூரண ஆதரவளிக்கும்!

## இந்திய தூதுவர் உறுதியளிப்பு

கொழும்பு, ஜூன் 06

விவசாயத் துறையில் நிலவும் பிரச்னைகளை தீர்ப்பதற்கு இலங்கைக்கு இந்தியா பூரண ஆதரவை வழங்கும் என்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு உறுதியளித்துள்ளார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான சந்திப்பிலேயே இந்த உறுதி வழங்கப்பட்டது.

மேலும், இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள 65,000 மெற்றிக் தொன் யூரியா உரம் தொடர்பிலும் இந்த சந்திப்பில் பேசப்பட்டது.

அத்துடன், அந்த உரத்தை இலங்கைக்கு வழங்குவதற்கு இந்தியப் பிரதமர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் இதன் போது தெரிவிக்கப்பட்டது.

ஓமானில் இருந்து இந்தியாவுக்கு இறக்குமதி செய்யப்படும் உரத்தை நேரடியாக இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த உரம் விரைவில் இலங்கையை வந்தடையும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகர் இதன் போது தெரிவித்தார். (கே)

## மரண அறிவித்தல்

மலர்வு 07 - 08 - 1934



உதிர்வு 31 - 05 - 2022

### திருமதி சீதாலக்ஷ்மி அம்மாள் நடராஜா (சீதா ரீச்சர்)

*ஓய்வுபெற்ற ஆசிரியை- அளவெட்டி அருணோதயா கல்லூரி*

பதுளையைப் பிறப்பிடமாகவும், யாழ். அளவெட்டி, ஜேர்மனி Düsseldorf ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், சுவிஸ் St. Gallen ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட சீதாலக்ஷ்மி அம்மாள் நடராஜா அவர்கள் 31.05.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை, நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற நடராஜா (மொடர்ன் தியேட்டர்- பதுளை) அவர்களின் அன்பு மனைவியும், சிற்சபேசன்(கனடா), சிவயோகன்(சுவிஸ்), விக்னேஸ்வரன் (இங்கிலாந்து), காயித்திரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சச்சிதானந்தன்(கனடா), காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, திருச்செல்வம், ராமநாதன், திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாத்ரி(மலேசியா), கிருஷ்ணவேணி(சுவிஸ்), நந்தினி(இங்கிலாந்து), ஜெகதீஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருத்திகா (கனடா), அஞ்சலி(சுவிஸ்), தீபன்(சுவிஸ்), சுவாதி(சுவிஸ்), விதுஷன்(ஜேர்மனி), கிஷோபன்(ஜேர்மனி), ஐஸ்வரியா (இங்கிலாந்து), திஷபன்(ஜேர்மனி), ஹரிஹரன்(இங்கிலாந்து), சாதனா (மலேசியா), ஓம்சாய்(மலேசியா) ஆகியோரின் அன்புப் பேத்தியும்,தீரன் அவர்களின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

**பார்வைக்கு**

Saturday, 04 Jun 2022 4:00 PM - 6:00 PM
Sunday, 05 Jun 2022 4:00 PM - 6:00 PM
Monday, 06 Jun 2022 4:00 PM - 6:00 PM
Friedhof Feldli Feldlistrasse 18, 9000 St. Gallen, Switzerland

**கிரியை**

Tuesday, 07 Jun 2022 8:30 AM - 11:00 AM
Friedhof Feldli Feldlistrasse 18> 9000 St. Gallen, Switzerland

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**விக்னேஸ்வரன் - மகன்**

தொடர்புகளுக்கு:
**சிற்சபேசன் - மகன்** Mobile : +60122102164
**சிவயோகன் - மகன்** Mobile : +41765050614
**விக்னேஸ்வரன் - மகன்** Mobile : +447886412385
**காயித்திரி - மகள்** Mobile : +4915221676037

*ரஷ்ய விமான விவகாரம்*

# இரு நாடுகளுக்கு இடையிலான தனிப்பட்ட பிரச்னையே அல்ல!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 06

ரஷ்ய விமானம் தொடர்பான பிரச்னை இரு நாடுகளுக்கு இடையிலானது அல்ல. அது தனிப்பட்ட சட்ட பிரச்னை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நீதித்துறை அமைச்சு ஊடாக இது தொடர்பில் ரஷ்ய வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்படுவதைத் தடுக்கும் வகையில் ஏரோ ஃப்ளோட் விமானத்திற்கு மேல் மாகாண வர்த்தக உயர் நீதிமன்றம் கடந்த 2 ஆம் திகதி தடை உத்தரவு பிறப்பித்தது.

இந்த வழக்கு ஐரிஷ் நிறுவனமான செலஸ்டியல் ஏவியேஷன் டிரேடிங் 10 லிமிட்டட் நிறுனம், முதல் பிரதிவாதியான பொதுக் கூட்டுப் பங்கு நிறுவனமான “ஏரோ ஃப்ளோட்“ மற்றும் இரண்டாவது பிரதிவாதியான எயார் நேவிகேஷன் மற்றும் இலங்கையின் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள், கட்டுநாயக்கவின் பதில் தலைவர் என்.சி. அபே வர்த்தன ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வணிகப் பிணக்கு தொடர்பான வழக்கு ஆகும்.

இந்த விடயம் இன்னும் நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்புக்காக நிலுவையில் உள்ளது. இந்த விடயம் வழக்கமான தூதரக வழிகளிலும் ஆலோசனையில் உள்ளதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது. (ஐ)

# சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 06

குருநாகல் - பொல்காவலை பிரதேசத்தில் அடையாளம் காணப்படாத ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மா ஓயா நீர்த்தேக்கத்திலிருந்தே உருக்குலைந்த நிலையில் இந்த சடலம் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக குருநாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)

## மரண அறிவித்தல்

மலர்வு 22 - 03 - 1966



உதிர்வு 05 - 06 - 2022

### மார்க்கண்டு சண்முகவடிவேல் (துரை)

யாழ். புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சண்முகவடிவேல் அவர்கள் 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற மார்க்கண்டு, மனோன்மணி தம்பதிகளின் அருந்தவப் புதல்வரும், திரு. திருமதி அங்கயற்கண்ணி தம்பதிகளின் அன்பு மருமகனும்,இதயமலர்(சாந்தி) அவர்களின் அன்புக் கணவரும்,ஹபிலன்(பிரான்ஸ்), சஜிதன்(பிரான்ஸ்), சுஹாஜினி, சரிதா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேஸ்வரி (கனடா), பூமணி(லண்டன்), சகுந்தலாதேவி, நாகேஸ்வரி, இராஜேஸ்வரி(கனடா), நகுலேஸ்வரி(இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்றவர்களான நடராசா, கமலகாந்தன், நவரத்தினம் மற்றும் நகுலேஸ்வரன், சந்திரன் ஆகியோரின் பாசமிகு மச்சானும்,செல்வன், செந்தூரன், சுகிர்தமலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 06.06.2022 திங்கட்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கேரதீவு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**மகேஸ்வரி - சகோதரி.**

தொடர்புகளுக்கு:
**சாந்தி - மனைவி** Mobile : +94774216833
**ஹபிலன் - மகன்** Mobile : +33668792413
**சஜிதன் - மகன்** Mobile : +33769978511
**மகேஸ்வரி - சகோதரி** Mobile : +16478657855
**தேவி - சகோதரி** Mobile : +94764014941

## புதிய தலைமை...

தில் நாட்டின் பொறுப்பை நேர்மையான ஆட்சியாளர்களிடம் ஒப்படைத்து, தன் பொறுப்புகளை நிறைவேற்ற சனி தயங்க மாட்டார் என்று கூறியுள்ளார்.

மற்றோர் சோதிடரான கல்யாணி ஹேரத் மெனிக்கே, "ஜுலைக்குப் பிறகு எந்த நாடகமும் இருக்காது. ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்குப் பிறகு, ஏப்ரல் 29, 2022 வெள்ளிக்கிழமை காலை 07.52 மணிக்கு, சனி கும்பம் குவிந்தது. சனி கும்பம் கடைசியாக மார்ச் 5, 1993 இல் குவிந்தது. ஏப்ரல் 2022 இல், நான்கு கிரகப் போர்கள் நடைபெற்றன. சனி மிகவும் முக்கியமான கிரகங்களில் ஒன்றாகும்.

இலங்கை ஜாதகப்படி கும்பம். இதன் அதிபதி சனி. அதன்படி தற்போது தனுசு ராசி வழியாக சஞ்சாரம் நடந்து வருகிறது. தனுசு ராசியில் செவ்வாய்க்கு உகந்த நேரத்தில் சனி இருக்கிறார். இந்த நேரத்தில், செவ்வாய் கும்ப ராசியிலும் இருந்தார். செவ்வாய் - சனி சேர்க்கையின் போது நல்லதை விட தீமையே அதிகம் என்பது இப்போது தெளிவாகிறது.

செவ்வாய் விக்ரமஸ்தானத்தின் ஆட்சியாளராகவும், 10 ஆம் அதிபதியாகவும் இருக்கிறார். நான் முன்னரே குறிப்பிட்டது போல சனியும் செவ்வாயும் இணைந்து ஆட்சியாளர்களின் அலட்சியத்தால் மே 9 ஆம் நாள் பேரழிவை ஏற்படுத்தியது. சொத்து சேதம், உயிர் சேதம் கூட ஏற்பட்டது. பொருளாதாரத்திலும் நாடு சீரழிந்தது. தற்போது, இலங்கையின் ஜாதகத்தில் உள்ள பொக்கிஷங்களைப் போலவே, ஆயஸ்தான குருவின் அதிபதியான சனி தனது சொந்த ராசியான மீனத்தில் சஞ்சரிக்கிறார். இது ஓரளவுக்கு நிம்மதி என்பதைச் சுட்டிக்காட்டலாம்.

தற்போது மீனத்தில் இருக்கும் செவ்வாய் 2022 ஜுன் 27 திங்கட்கிழமை காலை 5.40 மணிக்கு மேஷ ராசியில் நுழைகிறார். எனவே, இலங்கை ஜாதகத்தில் செவ்வாய் 3 ஆம் வீட்டிற்கு வரும் ஜுன் மாதத்துக்குப் பிறகு செவ்வாய் மற்றும் ராகு சேர்க்கை எவ்வாறு பாதிக்கப்படும் என்பதைக் கண்டறிய வேண்டியது அவசியம். அதனுடன் ஜுன் முதல் வாரத்தில் அவர்களின் சக்தி வாய்ந்த ராசி வக்ரமாகும். இலங்கையின் ஜாதகத்தில் கும்பம் இருப்பதால் ராசியில் சனி வக்ரமாகும். இதுவும் நல்லதல்ல.

செவ்வாய்-ராகு சேர்க்கையின் சனி வக்ரத்தில் நாட்டில் நல்லதை விட தீமையே அதிகம் நடக்கும் என்பது தெளிவாகிறது. இதன் விளைவுகள் தற்போதைய நிலையை விட மோசமாக இருக்கும் என்பது தெளிவாகிறது.

ஒடுக்கப்பட்டவர்களின் சகிப்புத் தன்மை எல்லை மீறுவதால் நாட்டில் ஜுன் நடுப்பகுதிக்குப் பிறகு பாரிய கலவரங்களும் வேலை நிறுத்தங்களும் நடைபெறும். இந்த நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கடுமையான கொள்கையை நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுப்பதால் நிலைமை தவிர்க்க முடியாமல் மோசமடையும்.

செவ்வாய் கிரகத்தின் தூண்டுதல்கள் மற்றும் ராகு கிரகம் மற்றும் சனியின் ஆதிக்கம் ஆகியவற்றால் இந்த நிலைமை மோசமடைகிறது. செவ்வாய் இளமையைக் குறிக்கிறது. சனி வயதானவர்களையும் ஒடுக்கப்பட்டவர்களையும் குறிக்கிறது. ஆசிரியர்கள் அறிஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் மதத் தலைவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

இதனால், இளைஞர்கள் மற்றும் படித்த, புத்திசாலித்தனமான ஒடுக்கப்பட்ட மக்களின் செயல்பாடுகளில் முன்னெப்போதும் இல்லாத வகையில் ஒற்றுமை ஏற்படுவதால், தற்போதுள்ள அரசியல்வாதிகளின் செயல்பாடுகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

ஆட்சியில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஊழல் அரசியல்வாதிகள் தங்கள் சிம்மாசனங்களை இழந்து தங்கள் சொந்த நாடுகளை விட்டு வெளியேற வேண்டும். ஜுலைக்கு பிறகு நாட்டில் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும். புதிய அரசும், இளைஞர் தலைமையும் உருவாகும். படிப்படியாக, அடுத்த ஆண்டு நடுப்பகுதிக்குள், தற்போதைய நிலைமை குறைந்து, நல்ல எதிர்காலத்தை நோக்கி நாடு நகரும்.

இலங்கையின் ஜாதகத்தில் இருக்கும் ஆசிரியர்களின் செல்வம் மற்றும் இடம் மூலம் நாட்டுக்கு வெளிநாட்டு உதவி மற்றும் நிதி வசதிகள் உருவாக்கப்படும். நாட்டின் பொருளாதார நிலை படிப்படியாக சிறப்பாக மாறி வரும்.

ஆட்சியாளர்களின் கடுமையான கொள்கைகளால் வெளிநாடுகளில் பிடிக்காமல் உள்ளது. மேலும், ஜுலை மாதத்திற்குப் பிறகு, ஊழல் ஆட்சியாளர்கள், நேர்மையற்ற மதத் தலைவர்கள் மற்றும் திருடர்கள் தவிர்க்க முடியாமல் சமூகத்திலிருந்து துடைத்தழிக்கப்படுவார்கள்.

ஓர் இளம் தலைமை மற்றும் ஒரு பெரிய புதிய கட்சி படித்த மற்றும் புத்திசாலிகளுடன் உருவாகும். இதிலிருந்து ஓரளவு நிவாரணத்தை மக்கள் எதிர்பார்க்கலாம். எவ்வாறாயினும், இவ்வருட முடிவிற்குப் பிறகு இளைஞர்களின் தலைமையில் நாடு முன்னேறும் என்பது தெளிவாகிறது. இந்த நிகழ்காலம் கெட்ட காலங்களின் முடிவுடன் நல்ல காலத்தின் ஆரம்பம் என்பதையும் சுட்டிக்காட்டலாம்.

கங்கா-மெனியோ என்ற சோதிடர் கூறுகையில்,

ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஆட்சிக்கு வருவார் என்று நான் மார்ச் 22 ஆம் நாள் கூறிய போது, பாராளுமன்றத்தில் ஓர் ஆசனம் கூட இல்லாதவர் எப்படி மீண்டும் பிரதமராக முடியும் என சிலர் கேலி செய்தனர். ஆனால், இப்போது அது நம் கண் முன்னே நிரூபணமாகி உள்ளது.

மிகுதி இரண்டு வருடங்கள் எத்தகைய பிரச்னையாக இருந்தாலும் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வார் என்று நான் இப்போது கூறுகின்றேன். ஆனால், ஐந்தாறு மாதங்கள் மக்கள் இப்படியே அவதிப்பட வேண்டியிருக்கும். இதன் பின்னர் இந்த நிலை படிப்படியாக மறைந்து விடும்.

மூத்த சோதிடரான நந்தன, ரேணுகா விக்கிரமசிங்க சுவனென ஜோதிட ஆராய்ச்சி நிறுவனம், கோணபால ஆகியோரின் பார்வையின்படி,

நம் நாட்டில் எதிர்பாராத பேரழிவுகள் மற்றும் ரயில் விபத்துகள் அதிகரித்து வருகின்றன. இதனால் உயிர் சேதம் அதிகரிக்கும். மத நிகழ்வுகள், மதத் தலைவர்கள் மற்றும் துறவிகள் பெரும்பாலும் வன்முறைத் தாக்குதல்கள் மற்றும் படுகொலைகளுக்கு பலியாகும் காலம் இது. மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தொடர முடியாத கோபத்தைக் காட்டி, அரசுக்கு எதிராகக் கடுமையாகப் போராடிய காலமும் அது.

ஒரு மாநிலத் தலைவர், ஒரு முக்கிய அரசியல்வாதி மற்றும் அரசியல் வாழ்க்கையில் இருந்து விலகுவது இந்த கால கட்டத்தில் நடைபெறுவது மிகவும் மோசமானது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் பல்வேறு பிரச்னைகளை சந்திக்க நேரிடும். யாரும் எதிர்பார்க்காத வகையில், இவர்கள் செய்த சில ஊழல்கள், போலி ஆவணங்கள் தயாரித்தல் போன்றவை மக்களிடையே பரவி, அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்கு தொடரப்பட்டு வருகிறது.

நாட்டில் நச்சு வாயுக்கள் அல்லது இரசாயனங்கள் அல்லது எண்ணெய், வெடி மருந்துகள், ஆயுதக் கிடங்கில் தீ, வெடிப்பு மற்றும் எண்ணெய் தாங்கி வாகனங்கள் தீப்பிடிப்பதால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று அறிக்கைகள் இருக்கும்.

நாட்டில், குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் விபத்துக்கள், நீர் விபத்துக்கள் மற்றும் வாகன விபத்துக்கள் மற்றும் மோதல்களில் இறக்கும் வாய்ப்புகள் அதிகம். வெளிநாடுகளில் அதிகளவில் பரவும் வைரஸ் நோயின் அபாயம் நம் நாட்டிலும் பரவத் தொடங்கும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## பால்மாவின்...

பால்மாவின் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது இறக்குமதி செய்யப்பட்ட 400 கிராம் பால்மா பைக்கெற் 1020 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பால் மா பைக்கெற் 2545 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேர்தல்...

சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "இலங்கையின் பிரதான ஆதரவாளராக இந்தியா இருக்கின்றது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவுவதற்கு ஏனைய நாடுகள் முன்வந்துள்ள போதிலும், இந்தியா ஏற்கனவே இலங்கைக்காக பலவற்றை செய்துள்ளது. எனினும், நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடிக்கு அயல் நாடான இந்தியாவின் ஆதரவை எதிர்பார்க்கிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அல்லது ராஜபக்ஷ குடும்பத்தினர்மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வரும் நிலையில், அது தொடர்பில் பின்பற்றப்படும் நடைமுறை என்ன? என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பிரதமர், "அவர்கள் சட்டத்தை மீறியிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப் படுத்தப்படும். இது ராஜபக்ஷக்களுக்கு மாத்திரம் அல்ல. எவருக்கும் பொருந்தும். சட்டத்தை மீறும் எந்தவொரு தரப்பினரும் தண்டிக்கப்படுவார்கள். விசாரணை அமைப்புகளால் விசாரணை மேற்கொள்ளப்படும்" என்று பதிலளித்தார்.

"நாடு தேர்தலை நடத்தும் நிலையில் இல்லை. அரசியலமைப்பின் 21வது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். ஆனால், அது எந்த தேர்தலுக்கும் அழைப்பு விடுக்காது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பது தொடர்பில் பொதுஜன வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்கப்படும். எனினும் அது தற்போது சாத்தியமற்றது. தேர்தலை நடத்துவதற்கு முன்னர் நிலவும் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியது அரசின் பொறுப்பாகும்"- என்றார். (ஐ)

## இறுதி...

விதமான வகிபாகத்தை செய்வது என்பது தொடர்பில் ஆராய்ந்திருந்தன. இந்த நிலையில், பிரதமர் ரணில் தலைமையில் இரண்டாவது கூட்டம் நடத்தப்படவிருந்தமையால் அது நிறைவடையும் வரையில் தமிழ்க் கட்சிகளும் தமது கூட்டத்தைத் தாமதத்திருந்தன.

பிரதமர் தலைமையிலான கூட்டத்தில் எவ்வாறான இணக்கப்பாடுகள் எட்டப்படுகின்றன என்பதை அவதானித்த பின்னர் அடுத்தகட்ட செயல்பாடுகளை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் பிரதமர் ரணில் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அரசியல் கட்சித்தலைவர்கள் 21குறித்து பொது இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள நிலையில் இன்று திங்கட்கிழமை கூடும் தமிழ்க் கட்சிகளும் தமது இறுதி நிலைப்பாட்டை எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

## பாடசாலைகள்...

வுற்று கடந்த 19ஆம் திகதியே பாடசாலைகள் மூடப்பட்டன.

இந்நிலையில், இரண்டாம் தவணைக்காக அனைத்துப் பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை மீளத் திறக்கப்படுகின்றன.

எனினும், பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து டீசலுக்கு தட்டுப்பாடு நிலவுவதால் தனியார் பஸ் சேவைகள் இன்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சேவையை வழங்க தீர்மானித்துள்ளன. இதனால், 18ஆயிரம் பஸ்களில் 6 ஆயிரம் பஸ்கள் மட்டுமே நாடு முழுவதும் சேவையில் ஈடுபடும் என்று தனியார் பஸ் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

ஆனாலும், பாடசாலை சேவைகளை பாதிக்காத விதத்தில் பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தனியார் பஸ் சேவை சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

## இலங்கைக்கு...

ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. தனது கோரிக்கையில், இலங்கைக்கு மருந்து உணவுப்பொருட்களை அவசரமாக வழங்குமாறு விடுக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலக உணவு ஸ்தாபனம், ஐக்கிய நாடுகளின உணவு அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றுடன் மேற்கொண்ட பேச்சுக்களை தொடர்ந்தே இந்த வேண்டுகோளை ஐ. நா. விடுக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## சர்வஜன...

அவர் கூறினார்.

மேலும், இரட்டை குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக அங்கம் வகிப்பதைத் தடுக்கும் ஏற்பாடு இந்த சட்டமூலத்தில் மாற்றமின்றி உள்வாங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

21ஆவது திருத்தச் சட்டம் மூல வரைவு தொடர்பில், கடந்த வெள்ளிக்கிழமை நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் பொது இணக் காடு எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதன் அடுத்த கட்ட செயல்பாடுகள் தொடர்பில் கருத்து வெளியிட்டபோதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தவிர, கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின்போது முன்வைக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் முன்மொழியப்பட்ட வரைவில் உள்வாங்கும் முகமாக திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் இன்று திங்கட்கிழமை அமைச்சரவை அமர்வின்போது இறுதி செய்யப்பட்ட 21ஆவது திருத்தச் சட்ட மூலத்திற் கான வரைவு சமர்ப்பிக்கப்படவுள்ளது. அமைச்சரவை அனுமதியைப் பெற்றதன் பின்னர் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இந்தத் திருத்தச் சட்ட மூலத்தை சர்வஜன வாக் கெடுப்புக்குச் செல்லாத வகையிலேயே ஏற்பாடுகளை செய்வதற்கு முயற்சிக்கிறோம். இருப்பினும், உயர் நீதிமன்றத்தை ஏதேனும் தரப்புக்கள் நாடுகின்ற பட்சத்தில் நீதிமன்ற தீர்மானத்துக்கு அமைவாக அடுத்தகட்ட செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மேலும், தற்போதுள்ள அரசியல் நெருக்கடிகளைப் போக்குவதற்கான தற்காலிக தீர்வாகவே இந்த 21ஆவது திருத்தம் அரசமைப்பில் மேற்கொள்ளப்படுகின்றது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## இனி...

அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## சிறுவர்களை...

பட்ட சிறுவர்களின் உடலில் சிவப்புக் கொப்புளங்கள் தோன்றுகின்றன என்று சிறுவர் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த நோய் இலகுவாகப் பரவும் எனவும், ஒரு தடவை தொற்றுக்கு உள்ளான சிறுவர்களுக்கு மீண்டும் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு பரசிற்றமோல் போன்றவற்றைக் குடிக்கக் கொடுத்து வீட்டில் ஓய்வெடுக்க வைக்க வேண்டும். இது கொடிய நோயல்ல, 6 மாதம் முதல் 12 வயது வரையான சிறுவர்களுக்கு இந் நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# டீசல் விநியோகத்தில் சிக்கல் கையிருப்பை பேணத் திட்டம்

கொழும்பு, ஜுன் 06

**இலங்கை பெற்றொலியக் கூட்டுத்தாபனத்திடம் நாட்டில் மட்டுப்படுத்தப்பட்ட டீசல் கையிருப்பு இருக்கிறது என்றும், இந்தக் கையிருப்பை அடுத்த டீசல் தொகுதி வரும் வரை முகாமைத்துவம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு மாத்திரமே டீசல் விநியோகிக்கப்படும் என பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனத்திடம் தற்போது தற்போது 40 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கையிருப்பு இருக்கிறது என்றும், நாளாந்த டீசல் விநியோகம் சுமார் 2,500 மெற்றிக் தொன்னாக குறைந் துள்ளது என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும், 9 அல்லது 10 ஆம் திகதிக்கான டீசல் விநியோகம் இன்னமும் உறுதிப்படுத்தப்பட வில்லை. எனினும், இந்திய கடன் வரியின் கீழ் அடுத்த டீசல் தொகுதி எதிர்வரும் 16 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளது.

இந்நிலையிலேயே பெற்றொலி யக் கூட்டுத்தாபனத்திடம் உள்ள டீசல் கையிருப்பை அடுத்த டீசல் தொகுதி வரும் வரை முகாமைத் தும் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ள தாகவும் எனினும், பெற்றொல் விநியோகம் வழமை போல இடம்பெறும் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ஐ)

## தபால் கட்டணங்களையும் உயர்த்துமாறு கோரிக்கை!

கொழும்பு, ஜுன் 06

தபால் கட்டணங்களை உயர்த்துமாறு தபால் திணைக்களத்தால் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

சாதாரண தபால் கட்டணத்தை 15 ரூபாயிலிருந்து 20 முதல் 40 ரூபாய் வரையில் உயர்த்தப்பட வேண்டும். அதிவேக தபால் சேவைக்கான கட்டணத்தை 55-65 ரூபாயிலிருந்து 200 ரூபாயாக அதிகரிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டில் தபால் திணைக்களம் 720 கோடி ரூபாய் நட்டமடைந்துள்ளது. தபால் கட்டணங் கள் உயர்த்தப்படாவிட்டால் நட்டம் காரணமாக தபாலகங்கள் மூடப்பட வேண்டிய நிலை உருவாகும் என தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ஐ)

## வெளிநாட்டு நாணயங்களை கொண்டு வந்த இந்தியர் கைது!

கொழும்பு, ஜுன் 06

சட்டவிரோதமாக வெளிநாட்டு நாணயங்களை இலங்கைக்கு கொண்டு வந்த இந்திய பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இவர் கைது செய்யப்பட்டாரெனத் தெரிவிக்கப்பட்டது.

கைதானவரிடமிருந்து ஒரு இலட்சத்து 17 ஆயிரம் கனடா டொலர்களும், 19 ஆயிரம் யூரோவும் சுங்கத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டன என்று தெரி விக்கப்பட்டது. (ஐ)

வவுனியா, மன்னார் உட்பட சில பகுதிகளில்

## தனியார் பஸ் சேவை இன்று ஸ்தம்பிக்கும்!

கொழும்பு, ஜுன் 06

நாட்டில் சில பகுதிகளில் இன்று திங்கட்கிழமை பஸ் சேவை முழுமையாக முன்னெடுக்கப்படமாட்டாது என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்தல் விடுத்துள்ளது.

கம்பஹா, மன்னார், வவுனியா, கேகாலை, மாவ னொல்லை, பொலநறுவை, பதுளை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் முழுமையாக பஸ்கள் சேவையில் ஈடுபடாது என அதன் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதிகளின் டிப்போக்கள் ஊடாக டீசல் விநியோகம் செய்யப்படாத காரணத்தால் இந்த தீர்மா னம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## தயிர் நஞ்சானதால் ஆறு பேர் பாதிப்பு!

திருகோணமலை, ஜுன் 06

தயிர் உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் இரு வேறு வைத்தியசாலைகளில் சேர்க் கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை ஹொரவபொத்தானையில் நேற்று காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஒரே குடும்பத் தைச் சேர்ந்த 6, 7, மற்றும் 15 வயதுடைய சிறுவர்கள் வயிற்று வலி, வாந்திபேதி காரணமாக மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தாய் மற்றும் இரு சிறார்கள் ஹொரவப்பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

மாடு மேய்ச்சலில் ஈடுபட்டு வரும் குடும்பத்தினர் பாலை தயிராக்கி உட்கொண்டனர். அது நஞ்சான தாலேயே உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்து வமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக் கப்பட்டது. (ஐ)

## தெல்லிப்பழை மருத்துவமனையில் மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஜுன் 06

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஏ. ஆர். வி. ஈ, ஏ. ஆர். எஸ். போன்ற மருந்துகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்று அந்த மருத்துவமனையின் நோயாளனர் நலன்புரி சங்க செயலாளர் சி. ஹரிகரன் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு பல மைல் தூரத்தில் இருந்தும் வடமாகாணத் தின் பல பகுதிகளில் இருந்தும் சிரமத்துக்கு மத்தியில் பொதுமக்கள் சிகிச்சைக்காக வருகின்றார்கள்.

இந்நிலையில் வைத்தியசாலையில் மருந்து இல்லாத போது பல்வேறுபட்ட இடர்பாடுகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இது விடயத்தில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ-3)

# 20 வீத குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு!

கொழும்பு, ஜுன் 06

மருத்துவமனையில் சேர்க்கப் பட்ட குழந்தைகளில் 20வீதமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறை பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று குழந்தைகளுக்கான லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை மருத்து வர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவும் பொருளா தார நெருக்கடி மற்றும் உணவுப் பற்றாக்குறையே போசாக்கின்மைக் குக் காரணம் எனக் கூறப்பட்டா லும், குழந்தைகளுக்கு அதிகளவு காய்கறிகளை உண்ணக் கொடுத் தால் இந்த நிலைமையைத் தவிர்க்க முடியும் என மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

"கடந்த வாரம் மருத்துவமனை யின் விடுதி எண் 02 இல் 53 குழந்தை களை பரிசோதித்தோம். அவர்களில், 20வீதமான குழந்தைகள் ஊட்டச் சத்து குறைபாடு உள்ளவர்கள் என் பதை நாங்கள் அறிந்தோம். அவர்க ளில் அரைவாசிக்கும் அதிகமானோர் கடுமையான ஊட்டச்சத்து குறை பாட்டால் பாதிக் கப்பட்டுள்ளனர், இது ஒரு சவாலான சூழ்நிலை.

"குழந்தைகள் காபோஹைதரேற், புரதங்கள், கொழுப்புகள் மற்றும் விற்றமின்கள் தேவையான அளவுக ளில் பெறாததே இதற்குக் காரணம். குழந்தை பிறந்து 6 மாதங்களுக்குப் பிறகு, குழந்தைக்கு ஊட்டச்சத்தை வழங்க தாய்மாருக்கு தாய்ப்பால் போதுமானதாக இல்லை. எனவே, தாய்மாருக்கு சில உணவுப் பொருட் களை அறிமுகப்படுத்த வேண்டும், " என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)







# செங்கலடியில் எரிபொருள் வழங்கலில் மணல் கடத்தல்காரருக்கு முன்னுரிமை

## ஜனாதிபதி செயலகத்துக்கு மக்கள் முறைப்பாடு

செங்கலடி, ஜுன் 06

செங்கலடியில் உள்ள எரிபொ ருள் நிலையங்களில் மணல் கடத் தல்காரர்களுக்கு முன்னுரிமை வழங்கி எரிபொருள் வழங்கப்படுகி றது என்று மக்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்துக்கு மக்கள் ஒன்றி ணைந்து நேற்று முன்தினம் தொலைபேசி அழைப்பு மூலம் முறைப்பாடு ஒன்றையும் வழங்கி யுள்ளனர்.

இந்த எரிபொருள் நிலையங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதா கவும் பதுக்கல் தொடர்பிலும் மணல் வியாபாரிகளின் ஆதிக்கம் தொடர்பிலும் இரகசிய குழு ஒன்றை நியமித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனா திபதி செயலகம் வாக்கு றுதியளித் ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இது தொடர்பான ஆதா ரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் ஜனாதிபதி செயல கம் முறைப்பாட்டாளர்களுக்குத் தெரிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.06.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து- உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



07.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ஏழாம் அறிவு, தெய்வத்திருமகன்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா - வைத்திய எஸ் . கேதீஸ்வரன்



**இரவு**
07.00 மணி : சொற்சமர் -பாடசாலை மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## சக்தி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு